# பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

# செயலாற்றுகை அறிக்கை ஆண்டு 2016







# நோக்கு

இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக இறப்பர் செய்கை மற்றும் கைத்தொழிலை முன்னெடுத்தல்.

# பணிக்கூற்று

இறப்பர் செய்கை மற்றும் கைத்தொழிலின் பண்புசார் மற்றும் தரவிருத்திக்காக சட்ட ரீதியிலான ஒழுங்கு விதிமுறைகளை அமுல்படுத்தல், இறப்பர் செய்கைக்காக நிதி மானிய உதவி, விவசாய உள்ளீடுகள் மற்றும் பரவலாக்கல் செய்கைகளை வழங்குதல் உட்பட இறப்பர் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.

# நோக்கம்

- இறப்பர் விளை நிலங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல்.
- இறப்பர் விளை நிலங்களின் அளவினை விருத்தி செய்தல்.
- பாரம்பரியம் அல்லாத பிரதேசங்களிலும் இறப்பர் செய்கையினை பரவலாக்குவதன் மூலம் அப்பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு நிரந்தர வருமான வழிமுறையினை வழங்குதல்.
- முடிவுப் பொருள் உற்பத்தியினை ஊக்குவிப்பதன் மூலம் தொழில் வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பதை விருத்தி செய்தல் மற்றும் இறப்பருக்காக கூடுதலான பெறுமதியினைச் சேர்த்தல்.
- பண்புசார் தரம்மிக்க பெறுமதிகூடிய இறப்பர் கன்றுகளை வழங்குவதன் மூலம் உற்பத்தித் திறனை மேம்படுத்தல்.
- பரவலாக்கல் சேவைகளை வழங்குவதன் மூலம் இறப்பர் செய்கையின் நிலையான தன்மையினை உறுதிப்படுத்தல்.

# உள்ளடக்கம்


**1. அறிமுகம்** **1**

1.1. வரலாற்றுப் பின்னணி 2-3

1.2. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய பிரதான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சட்ட மூலங்கள் 3-4

1.3. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் 4-5

1.4. திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு 6

1.5. ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் 7

1.6. திணைக்களத்தின் பணியாளர் சபைத் தகவல்கள் 8

**2. செயற்சாதனை முன்னேற்றங்கள் - 2016 ஆம் ஆண்டு** **9**

2.1. இறப்பர் செய்கை மானிய உதவி வேலைத்திட்டம் 9

2.2. இறப்பர் கன்று உற்பத்தி 10

2.3. மழைப் பாதுகாப்புக் கவசத்தை இடும் வேலைத்திட்டம் 10

2.4. இடைக்காலப் பயிர்ச் செய்கை வேலைத்திட்டங்கள் 10

2.5. பயிற்சி வேலைத்திட்டங்கள் 11

2.6. சம்பிரதாயம் அல்லாத பிரதேசங்களிலும் இறப்பர் செய்கையை மேற்கொள்ளல் 11

**3. இயற்கை இறப்பர் கைத்தொழில் சார்ந்த தகவல்கள் 2016** **12**

3.1. இறப்பர் செய்கை நிலப்பரப்பின் அளவு 12

3.2. இறப்பர் உற்பத்தி மற்றும் உற்பத்திச் செலவினம் 13-15

3.3. உள்நாட்டு இறப்பர் பயன்பாடு 16

3.4. மூலப்பொருளாக இயற்கை இறப்பர் ஏற்றுமதி 16-18

3.5. இறப்பர் இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள் 2016 18-19

3.6. இறப்பர் விலை 19-20

3.7. இறப்பர் வர்த்தகர்கள் 21

3.8. இறப்பர் மீள்செய்கை/ புதிய செய்கை மானிய உதவித் திட்டம் 21-22

3.9. புதிய செய்கையை உள்ளடக்கிய இறப்பர் செய்கையின் முன்னேற்றங்கள் 22-27

3.10. மானிய உதவிக் கொடுப்பனவு 28

3.11. இறப்பர் கன்று நாற்றுமேடை மற்றும் கன்று விநியோகம் 28-30

3.12. இடைக்காலப் பயிர்ச் செய்கை 31-32

3.13. மழைப் பாதுகாப்புக் கவசத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் பிரபல்யப்படுத்தல். 32-33

| | | |
|---|---|---|
| 3.14. | இறப்பர் செய்கைக்காக பசளை மானிய உதவியை வழங்குதல் | 33-34 |
| 3.15. | தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு காணித் துண்டுகளாக வேறுபடுத்திநிறுவகிக்கும் சபையின் செயற்பாடுகள் | 35 |
| 3.16. | சர்வதேச பணிகள் | 35 |
| 3.17. | சட்டப் பணிகள் | 36-37 |
| 3.18. | விசேட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் | 37-38 |
| 3.19. | இணைந்த நிதியம் | 38 |
| 3.20. | செஷ் கிடைப்பனவு மற்றும் அது அறவிடும் முறை | 39-40 |
| 3.21. | மீள் பயிர்ச் செய்கை ஆலோசனை சபை | 40 |
| 3.22. | உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் | 41 |
| 3.23. | பிரச்சாரப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் | 42-43 |
| 3.24. | கணணிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் | 44 |

**4. பிரதேச அலுவலக முன்னேற்றங்கள் 45**

| | | |
|---|---|---|
| 4.1. | இறப்பர் புதிய செய்கை முன்னேற்றம் | 45 |
| 4.2. | இறப்பர் மீள் செய்கை முன்னேற்றம் | 45 |
| 4.3. | இடைக்காலப் பயிர்ச் செய்கை முன்னேற்றம் | 46 |
| 4.4. | மழைப் பாதுகாப்புக் கவசங்களை இடல் | 46 |
| 4.5. | பால் வெட்டும் கலை தொடர்பான பயிற்சி வேலைத்திட்டம் | 47 |
| 4.6. | பால் வெட்டும் கலைசார்ந்த தொழில்சார் பயிற்சி வேலைத்திட்டம் | 47 |
| 4.7. | இறப்பர் ஒட்டுமுறைக்கான பயிற்சி வேலைத்திட்டம் | 48 |

**5. ஏனைய நிறுவனங்களில் சேவைகளை மேற்கொள்ளல் 49**

# முன்னுரை

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இறப்பர் காணி புள்ளிவிபரங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த இறப்பர் செய்கை நிலப்பரப்பின் அளவு 136,274 ஹெக்டேயர் ஆகும். இக் காணியின் அளவில் 87,996 ஹெக்டேயர் சிறு இறப்பர் தோட்டப் பிரிவிற்கும், 48,278 ஹெக்டேயர் தோட்டக் கம்பனிகளுக்கும் உரியதாகும். ஆண்டில் மொத்த இறப்பர் உற்பத்தி 79,009 மெற்றிக்தொன் என்பதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 11% குறைவைக் காண்பிக்கின்து. மொத்த இறப்பர் உற்பத்தியில் 50% சீட் இறப்பர் என்பதுடன், 26% இறப்பர் பால் உற்பத்தி மற்றும் 19% கிரேப்ட் இறப்பர் உற்பத்திக்கு மற்றும் 5% புளொக் இறப்பர் உற்பத்திக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்த இறப்பர் உற்பத்தியில் 20% ஏற்றுமதி செய்யப்படுவதுடன் 80% உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களினால் பயன்படுத்தப் படுகின்றது. பாக்கிஸ்தான், மலேசியா, ஜப்பான், ஜேர்மன், இத்தாலி, அமெரிக்கா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் மூலப்பொருளாகக் காணப்படும் இறப்பரைக் கொள்வனவு செய்யும் பிரதான நாடுகள் என்பதுடன் அந்நாடுகளினால் கொள்வனவு செய்யப்பட்ட இறப்பர் அளவு மொத்த ஏற்றுமதி அளவில் 75% மாகும். 2016 ஆம் ஆண்டில் ஒரு கிலோகிராம் சீட் இறப்பருக்கான சாதாரண விலை ரூபா. 238.97 என்பதுடன் அது முன்னைய ஆண்டை விட 3% விலை வீழ்ச்சியினைக் காண்பிக்கின்றது.

அரச தலையீடுகளுக்கமைய இறப்பர் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் இறப்பர் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு கூடுதலாக பயன்மிக்கதாக அமைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டிற்காக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ரூபா. 1479.32 மில்லியன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் ரூபா. 1162.64 மில்லியன் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன் முன்னேற்றம் 79% மாகும். அரசாங்கத்தின் நாற்றுமேடைகளில் ஆண்டிற்கான கன்று உற்பத்தி 1.20 மில்லியன் என்பதுடன் விநியோகிக்கப்பட்ட இறப்பர் கன்றுகளின் அளவு 1.04 மில்லியனாகும்.

பாரம்பரியமல்லாத பிரதேசங்களிலும் இறப்பர் செய்கையினை விரிவுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் மொனராகலை, பதுளை, அம்பாரை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களிலும் புதிய இறப்பர் செய்கைகளை ஆரம்பிக்க 2011 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளைத் தொடர்ந்தும் அமுல்படுத்தும் செயற்பாடுகள் 2016 ஆம் ஆண்டிலும் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறு 2016 ஆம் ஆண்டில் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாட்டுப் பணிகளை வெற்றிகரமாக நிவர்த்தி செய்வதற்காக பல துறைகளில் பங்களிப்புக்களை வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

ஆர்.பி. பிரேமதாஸ
பணிப்பாளர் நாயகம்
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

# நன்றியுரை

2016 ஆம் ஆண்டு பொதுத் திறைசேரியினால் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்ட நிதியில் 79% நிதி முன்னேற்றங்களைப் பெற்றுக் கொள்வதற்காக முடிந்த விசேட ஆண்டாக காணப்படுகின்றது. இந் நிதி முதலீடுகள் ஊடாக இறப்பர் செய்கையின் அபிவிருத்திப் பணிகளை ஊக்குவித்தல், மானிட வள விருத்தி மற்றும் பௌதீக வள விருத்திகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஊழியர் பயிற்சி மற்றும் உற்பத்தித் திறன் மேம்பாட்டு வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதன் ஊடாக ஊழியர்களை ஊக்குவித்தல் மற்றும் திருப்திகரமான பணிச் சூழலை உருவாக்க முடிந்ததுடன் அதன் மூலம் வினைத்திறன்மிக்க சேவையினை வழங்கவும் வாய்ப்புக் கிடைத்தது.

இது எவ்வாறாக இருப்பினும் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை எட்டுவதற்கு பல்வேறுபட்ட முறைகளில் ஒத்துழைப்புக்களை வழங்கிய ஊழியர்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றியினைத் தெரிவிக்கிறேன்.

ஆர்.பி. பிரேமதாஸ
பணிப்பாளர் நாயகம்
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

# 1. அறிமுகம்

பல தாசப்தங்கள் தொடக்கம் இலங்கைக்கு அன்னிய நாட்டுச் செலாவணியினைப் பெற்றுத்தரும் பிரதான பொருளாதாரப் பெருந்தோட்டப் பயிராக இறப்பர் செய்கை நாட்டின் பொருளாதாரத்திற்குப் பலம்பொருந்திய பங்களிப்பினை வழங்கியுள்ளது. பிரதானமாக இலங்கையின் 14 நிருவாக மாவட்டங்களில் இறப்பர் செய்கை விரிவடைந்துள்ளதுடன் ஏற்கனவே முல்லைத்தீவு, வவுனியா, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் இறப்பர் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டங்கள்



## 1.1. வரலாற்றுப் பின்னணி

இறப்பர் பயிர் ஹெவியா பிரசியலியன்சிஸ் (Havea brasialiensis) என தாவரவியல் விஞ்ஞானப் பெயர் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிரேசிலில் கூடுதலான மழை கொண்ட வனப் பிரதேங்களில் இயற்கையாக வளரும் இந்தத் தாவரத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட இறப்பர் பால் தற்போது முழுஉலகிலும் பல உற்பத்திகளுக்குப் பயன்படுத்தக்கூடிய இயற்கையான மூலப் பொருளாக மாற்றமடைந்துள்ளது.

பிருத்தானிய காலனித்துவத்தின் கீழ் ஆட்சி செய்யப்பட்ட காலத்தில் அதாவது 1876 ஆம் ஆண்டில் "கென்றி பிக்கேம்" என்ற ஆங்கிலேயர் முதல் இறப்பர் கன்றை கம்பஹா கெனரத்கொட தாவரவியல் பூங்காவில் நாட்டு இலங்கைக்கு இறப்பர் மரத்தை அறிமுகப்படுத்தினார். அதிலிருந்து 07 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இறப்பர் செய்கை தெற்காசியபூராகவும் விரிவடைந்து இறப்பர் உற்பத்தி துரிதமாக அதிகரித்துச் சென்றது. இதற்கிணைவாக இறப்பரின் விலை அதிகரித்தமையினால் விலையினை நிலைப்படுத்தும் நோக்குடன் பிருத்தானியாவினால் 1922 ஆம் ஆண்டில் "ஸ்ரிவென்சன் ஒழுங்கு விதிமுறைகள்" அறிமுகப்படுத்தப்பட்டது. உற்பத்திகள் பங்கசு முறை மற்றும் புதிதாக இறப்பர் வளர்ப்பினை வரையறுக்கப்பட்ட இவ் ஒழுங்கு விதிமுறைகளுக்கு இறப்பர் செய்கையாளர்களினால் விடுக்கப்பட்ட எதிர்ப்புக்கள் காரணமாக 1928 ஆம் ஆண்டில் இச் செயற்பாடுகள் கைவிடப்பட்டன. அது தொடக்கம் மீண்டும் இறப்பர் விநியோகம் அதிகரித்து விலை குறைவடைந்தமையைத் தொடர்ந்து 1934 ஆம் ஆண்டில் இறப்பர் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட சகல நாடுகளினதும் இணக்கத்துடன் "International Rubber Regulation Agreement" என்ற உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. ஸ்ரிவென்சன் ஒழுங்கு விதிமுறைகளுக்குச் சமமான நிபந்தனைகளைக் கொண்ட இவ் உடன்படிக்கையின் வாசகங்களை அமுல்படுத்துவதற்காக இறப்பர் செய்கை மேற்கொள்ளும் நாடுகளில் இறப்பர் நிருவாகத்திற்காக அரச நிறுவனம் ஒன்று தாபிக்கப்பட்டது. இதற்கமைய "1934 ஆம் ஆண்டில் இலக்கம் 06 கொண்ட கட்டளைச் சட்டத்தின்" மூலம் இறப்பர் நிருவாகத் திணைக்களம் தாபிக்கப்பட்டது. இத் திணைக்களத்தின் முதல் இறப்பர் நிருவாகியாக திரு. பி. சரவணமுத்து கடமையாற்றினார்.

இறப்பர் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக "1953 இலக்கம் 36 கொண்ட இறப்பர் மீள் செய்கை மானிய உதவிச் சட்டம்" அங்கீகரிக்கப்பட்டது. இறப்பர் மீள் செய்கைக்கு வாய்ப்பளிக்கும் வகையில் "1934 இலக்கம் 06 கொண்ட இறப்பர் நிருவாக கட்டளைச் சட்டத்தை" மறுசீரமைத்து "1956 இலக்கம் 11 கொண்ட இறப்பர் நிருவாகச் சட்டம்" அங்கீகரிக்கப்பட்டதுடன் அச்சட்டம் மற்றும் "1953 இலக்கம் 36 கொண்ட இறப்பர் மீள் செய்கை மானிய உதவிச் சட்டத்திற்கு" உரிய கடமைகள் இறப்பர் நிருவாகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

இறப்பர் நிருவாகத் திணைக்களத்தின் பணிகளைத் தொடர்ந்தும் விரிவுபடுத்தி 1994 ஆம் ஆண்டில் அப்போது இருந்த இறப்பர் நிருவாகத் திணைக்களத்தை ஒழித்து அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்பட்டது. இதற்கமைய அது வரையில் காணப்பட்ட கடமைகளுக்கு மேலதிமாக இறப்பர் செய்கைத் துறையின் அபிவிருத்திக்கு உதவக்கூடிய பரவலாக்கல் சேவை, கன்று உற்பத்தி மற்றும் பசளை விநியோகம் போன்ற மிகுந்த விரிவான பரம்பலைக் கொண்ட சேவையினை வழங்க இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு முடிந்தது.

மேலும் இத் திணைக்களத்திற்கு இறப்பர் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம், சகல காணி உரிமையாளர்களுக்கு விற்பனை மற்றும் பரவலாக்கல் சேவைகளை வழங்கி துருசவிய நிதியத்திற்குப் பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன.

## 1.2. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய பிரதான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சட்டமூல அம்சங்கள்

### 1.2.1. 1953 இலக்கம் 36 கொண்ட இறப்பர் மீள்செய்கை மானிய உதவிச் சட்டம்

இச் சட்டத்தின் கீழ் இறப்பர் மீள் செய்கை, இறப்பர் புதிய செய்கைகள், இடைக்காலப் பயிர்ச் செய்கை, கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் போன்றவற்றிக்காக மானிய உதவிச் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன. மேலும் இச்சட்டத்தின் 7 வது வாசகத்தின் கீழ் செஷ் வரி விதிப்பிற்காக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.2.2. 1956 இலக்கம் 11 கொண்ட இறப்பர் நிருவாகச் சட்டம்

இறப்பர் நிருவாகச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் நாட்டில் காணப்படும் சகல சிறிய இறப்பர் காணிகள் மற்றும் இறப்பர் தோட்டங்களின் செய்கைகள், உரிமையாளர்கள், காணி அளவு போன்றவற்றைக் குறிப்பிடும் ஆவணத்தைப் பேணுவது இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் நிலையியற் சபைப் பணிகளாகும். இறப்பர் நிருவாகச் சட்டத்தின் கீழ் இறப்பர் செய்கைகளில் காணப்படும் சுமார் 10 ஏக்கரை விடக்கூடுதலான (4.04 ஹெக்டேயரை விட மேற்பட்ட) இறப்பர் செய்கை ''தோட்டம்'' என்றும் 10 ஏக்கரை விடக் குறைந்த (4.04 ஹெக்டேயரை விடக் குறைந்த) இறப்பர் செய்கை ''சிறிய காணியாக'' வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது.

### 1.2.3. 2006 இலக்கம் 20 கொண்ட இறப்பர் மீள்செய்கை மானிய உதவி (மறுசீரமைப்புச் சட்டம்)

2006 இலக்கம் 20 கொண்ட இறப்பர் மீள்செய்கை மானிய உதவி (மறுசீரமைப்பு) சட்டத்திற்கமைய, உள்நாட்டு நுகர்விற்கு எடுக்கப்படும் இயற்கை இறப்பர் மற்றும் செயற்கை இறப்பருக்கமைய செஷ் வரியினை அறவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

2007 இலக்கம் 01 கொண்ட செஷ் வரி கட்டளையினை அமுல்படுத்துவதற்கு முன்னர் செஷ் வரி அறவிடப்படுவது ஏற்றுமதி செய்யப்படும் இயற்கையான இறப்பருக்காகும்.

2007 இலக்கம் 01 கொண்ட இயற்கை இறப்பருக்காக செஷ் வரி கட்டளை உட்பட 2007 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1518/18 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய ஏற்றுமதி அல்லது உள்நாட்டு பயன்பாட்டிற்காக உற்பத்தி செய்யப்படும் இறப்பர் சார்ந்த முடிவுப்பொருள் உற்பத்திக்குத் தேவையான இறப்பர் கொள்வனவு செய்யப்படும் வேளையில் 01 கிலோகிராமிற்கு ரூபா. 4 செஷ் வரி அறவிட இத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முடிவுப் பொருள் உற்பத்தி செய்யப்படும் கைத்தொழிலாளர்களினால் இறப்பர் கொள்வனவு செய்யப்படும் வேளையில் உற்பத்தியாளர்களிடமிருந்து அறவிட்ட இவ் வரி நிதியினை இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும்.

## 1.3. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

பொருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனமான இத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் பத்தரமுல்ல, கனகேன, இலக்கம் 465 கொண்ட இடத்தில் அமைந்துள்ளது. பிரதான நிறுவன அலுவலகத்தினால் நிருவாகம், செயற்பாடுகள், செஷ் வரி சேகரிப்பு மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மானிய உதவிக் கொடுப்பனவு, இறப்பர் கன்று உற்பத்தி விநியோகம், பசளை விநியோகம் மற்றும் ஆலோசனை சேவைகள் போன்ற இறப்பர் செய்கையின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் சேவைகள் மக்களுக்கு மிகுந்த வினைத்திறனுடன் வழங்கும் நோக்குடன் இப்பணிகள் 5 பிரதேச அலுவலகங்கள் மூலம் அமுல்படுத்தப்படுகின்றன. உரிய பிரதேச அலுவலகங்கள் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்ட மாவட்டங்கள் தழுவப்படுகின்றன.

1. கேகாலை பிரதேச பிரதிப் பணிப்பாளர் அலுவலகம்
   (கேகாலை, குருநாகல், கண்டி, மாத்தளை மற்றும் கம்பஹா மாவட்டத்திற்காக)

2. களுத்துறை பிரதேச பிரதிப் பணிப்பாளர் அலுவலகம்
   (களுத்துறை மாவட்டத்திற்காக)

3. இரத்தினபுரி பிரதேச பிரதிப் பணிப்பாளர் அலுவலகம்
   (இரத்தினபுரி மற்றும் கொழும்பு மாவட்டத்திற்காக)

4. காலி பிரதேச பிரதிப் பணிப்பாளர் அலுவலகம்
   (காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக)

5. மொனராகலை பிரதேச உதவிப் பணிப்பாளர் அலுவலகம் (மொனராகலை, பதுளை, அம்பாரை மாவட்டங்களுக்காக)

மேலும் இறப்பர் செய்கைக்காக பண்புசார் தரம்மிக்க ஒட்டுமுறை இறப்பர் கன்று உற்பத்திக்காக அரச மரக்கன்று நாற்றுமேடைகள் எட்டும் தாபிக்கப்பட்டுள்ளன.

1. மீரிகம (கம்பஹா மாவட்டம்)
2. வெலிகடமுல்ல (கம்பஹா மாவட்டம்)
3. ஆகல்ஓயா (களுத்துறை மாவட்டம்)
4. குருகொட (களுத்துறை மாவட்டம்)
5. கரபிஞ்சா (இரத்தினபுரி மாவட்டம்)
6. கும்புக்கன (மொனராகலை மாவடடம்)
7. மித்தெனிய (ஹம்பாந்தோட்டை மாவட்டம்)
8. பதியத்தலாவ (அம்பாரை மாவட்டம்)



குருகொட இறப்பர் கன்று நாற்றுமேடை



மித்தெனிய இறப்பர் கன்று நாற்றுமேடை



கரபிஞ்சா இறப்பர் கன்று நாற்றுமேடை

## 1.4. திணைக்கள நிறுவனக் கட்டமைப்பு



## 1.5. ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்




❖ பிரதேச பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் அலுவலகம்- காலி, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மொனராகலை

## 1.6. திணைக்களப் பணியாளர் சபை தொடர்பான தகவல்கள்

| தொ. இல | பதவிகள் | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை | தற்போதைய பணியாளர் சபை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் - இ.நி.வே | 1 | 1 | 0 |
| 02 | பணிப்பாளர் - இல.நி.சேவை | 2 | 1 | 1 |
| 03 | பிரதம கணக்காளர் - இ.க. சே | 1 | 1 | 0 |
| 04 | பிரதிப் பணிப்பாளர் - இ.த.தொ.சே | 1 | 0 | 0 |
| 05 | பிரதிப் பணிப்பாளர் - இ.நி.சே<br>உதவிப் பணிப்பாளர் - இ.நி.சே | 16 | 14 | 2 |
| 06 | உதவிப் பணிப்பாளர் - இ.தி.சே | 1 | 1 | 0 |
| 07 | கணக்காளர் - இ.க.சே | 6 | 4 | 2 |
| 08 | உதவிப் பணிப்பாளர்- இ.த.தொ.சே | 2 | 1 | 1 |
| 09 | உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| 10 | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர் - இ.த.மற்.தொ.சா.தொ.சே | 2 | 0 | 2 |
| 11 | கணக்காய்வு எழுது வினைஞர் | 1 | 1 | 0 |
| 12 | நிருவாக உத்தியோகத்தர் | 4 | 3 | 1 |
| 13 | பிரச்சார உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 14 | வரவு செலவு உதவியாளர் | 1 | 1 | 0 |
| 15 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 22 | 18 | 4 |
| 16 | அபிவிருத்தி உதவியாளர் | 5 | 3 | 2 |
| 17 | நாற்றுமேடை முகாமையாளர் | 7 | 6 | 1 |
| 18 | கட்டடப் பராமரிப்பு உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 19 | பொது முகாமைத்துவ உதவியாளர் | 139 | 115 | 24 |
| 20 | தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் | 5 | 2 | 3 |
| 21 | எழுது வினைஞர் / தட்டெழுத்தாளர் | 11 | 11 | 0 |
| 22 | இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் செயற்திட்டம் - விசேட தரம் | 12 | 0 | 12 |
| 23 | இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் | 182 | 146 | 36 |
| 24 | அலுவலக ஊழியர் சேவை | 28 | 26 | 2 |
| 25 | சாரதி | 36 | 32 | 04 |
| 26 | லொறி உதவியாளர் | 8 | 8 | 0 |
| 27 | காவலாளி | 01 | 1 | 0 |
| 28 | தேசக்தி சபை | | 10 | 0 |
| | **மொத்தம்** | **497** | **409** | **97** |

**ஊழியர் சபை எண்ணிக்கைக் குறிப்பு i**

# 2. செயற்சாதனை முன்னேற்றங்கள் - 2016 ஆம் ஆண்டு

இறப்பர் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக இத் திணைக்களத்தினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட பணிகள் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டன.

- இறப்பர் செய்கை மானிய உதவி வேலைத்திட்டம்
- மரக்கன்று உற்பத்தி
- மழைப் பாதுகாப்புக் கவசத்தை அமைப்பதற்கான வேலைத்திட்டம்
- இடைக்காலச் செய்கை வேலைத்திட்டம்
- பயிற்சி வேலைத்திட்டங்கள்
- பசளை மானியத்தை வழங்குதல்.

## 2.1. இறப்பர் செய்கை மானிய உதவி வேலைத்திட்டம்

இறப்பர் புதிய செய்கை வேலைத்திட்டத்தின் கீழ் பாரம்பரியம் மற்றும் பாரம்பரியம் அல்லாத பிரதேசங்களில் சிறு தோட்டங்களுக்கு 2016 ஆம் ஆண்டில் 2800 ஹெக்டேயர் இலக்கு காணப்பட்டதுடன் இதில் 592 ஹெக்டேயர் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இவ் 592 ஹெக்டேயர் செய்கைக்காக பாரம்பரியம் மற்றும் பாரம்பரியம் அல்லாத பிரதேசங்களில் சிறுதோட்ட உரிமையாளர்களுக்காக இறப்பர் புதிய செய்கைகளுக்காக மானிய உதவியான ரூபா. 179.90 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

இறப்பர் மீள்செய்கை வேலைத்திட்டத்தின் கீழ் சிறு தோட்டங்களுக்காக 2700 ஹெக்டேயர் இலக்கு காணப்பட்டதுடன் 538 ஹெக்டேயரில் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் 1500 ஹெக்டேயர் இலக்கு காணப்பட்டதுடன் 336.15 ஹெக்டேயரில் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய இறப்பர் மீள் செய்கைத் திட்டத்தின் கீழ் செய்கை மேற்கொள்ளப்பட்ட மொத்தக் காணியின் அளவு 874.15 ஹெக்டேயர் என்பதுடன் இதற்கான மானிய உதவியாக ரூபா. 337.51 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.



பால் வெட்டும் இறப்பர் செய்கை - காலி

## 2.2. கன்று உற்பத்தி

திணைக்களத்தினால் 08 நாற்றுமேடைகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதில் 07 நாற்று மேடைகள் மூலம் கன்று உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. அம்பாரை மாவட்டத்தில் புதிதாகத் தாபிக்கப்பட்டுள்ள பதியத்தலாவ நாற்றுமேடையில் கன்று உற்பத்திப் பணிகள் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டன.

## 2.3. மழைப் பாதுகாப்பு கவசங்களை இடும் வேலைத்திட்டம்

மழைப் பாதுகாப்புக் கவசங்களை இடும் வேலைத்திட்டங்களின் கீழ் சிறு தோட்டங்களுக்காக 1000 ஹெக்டேயர் இலக்கு காணப்பட்டதுடன் இதில் 182.62 ஹெக்டேயருக்காக மழைப் பாதுகாப்புக் கவசம் இடப்பட்டது. சிறுதோட்டங்களுக்காக மானிய உதவியாக ரூபா. 2.69 மில்லியனும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்காக 3000 ஹெக்டேயர் இலக்குக் காணப்பட்டதுடன் 2452 ஹெக்டேயருக்காக மழைப் பாதுகாப்பு கவசங்கள் இடப்பட்டன. மானிய உதவியாக ரூபா. 20.34 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டது.



மழைப் பாதுகாப்புக் கவசங்கள் இடப்பட்ட இறப்பர் காணி

## 2.4. இடைக்காலப் பயிர் வேலைத்திட்டங்கள்

முதிர்ச்சியடையாத இறப்பர் செய்கையுடன் இறப்பர் செய்கையாளர்களுக்கு மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இடைக்காலப் பயிர்ச்செய்கை வேலைத்திட்டத்தின் கீழ் 830 ஹெக்டேயர் இலக்குக் காணப்பட்டதுடன் இதில் 183.50 ஹெக்டேயர் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இடைக்காலப் பயிர்ச்செய்கை வேலைத்திட்டத்திற்காக மானிய உதவியாக ரூபா. 1.20 மில்லியன் ரூபா நிதி சிறுஇறப்பர் தோட்டக் காணி உரிமையாளர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.



இறப்பருடன் வாழை செய்கை மேற்கொள்ளப்பட்ட காணி



இறப்பருடன் அன்னாசி செய்கை மேற்கொள்ளப்பட்ட காணி

## 2.5. பயிற்சி வேலைத்திட்டங்கள்

பயிற்சி வேலைத்திட்டங்களாக பால் வெட்டும் கலைசார்ந்த வேலைத்திட்டங்கள் பொதுவாக, தொழில்சார்ந்த பால்வெட்டும் கலைப் பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் ஒட்டுனர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. பால்வெட்டும் கலைசார்ந்த பயிற்சி வேலைத்திட்டத்தின் கீழ் பொதுவாக பால்வெட்டும் தொழிலாளர்களை இலக்காகக் கொண்டு 2520 பேர்களுக்கிடையே அதாவது 2480 பேர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. பால் வெட்டும் கலைசார்ந்த அறிவு பொதுவான பயிற்சி வேலைத் திட்டங்களுக்காக ரூபா. 2.06 மில்லியன் செலவிடப்பட்டன. தொழில்சார் பால்வெட்டும் கலைசார்ந்த செயற்பாடுகளை இலக்காகக் கொண்டோர் எண்ணிக்கை 300 என்பதுடன் இவ்வாண்டில் 305 பேர்களுக்காகவும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. தொழில்சார் பால் வெட்டும் கலைப்பயிற்சி வேலைத்திட்டத்திற்காக ரூபா. 2.50 மில்லியன் செலவிடப்பட்டது. ஒட்டுனர்களுக்குப் பயிற்சியளிப்பதை இலக்காகக் கொள்ளப்பட்டோர் எண்ணிக்கை 210 என்பதுடன் இச் சகலருக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஒட்டுனர் பயிற்சி வேலைத்திட்டத்திற்காக ரூபா. 0.19 மில்லியன் செலவிடப்பட்டது. இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெளிக்கள உத்தியோகத்தர் பயிற்சியினை இலக்காகக் கொண்டோரின் அளவு 182 என்பதுடன் சகலரும் பயிற்சிக்காகப் பங்கேற்றுள்ளனர். இதற்காக ரூபா. 2.18 மில்லியன் செலவாகியுள்ளது.



பால் வெட்டும் கலைசார்ந்த பயிற்சி வேலைத்திட்டங்கள்



பாரம்பரியம் அல்லாத பிரதேசங்களில் காணப்படும் இறப்பர் காணிகள்

## 2.6. பாரம்பரியம் அல்லாத பிரதேசங்களில் இறப்பர் செய்கையை மேற்கொள்ளல்.

பாரம்பரியம் அல்லாத பிரதேசங்களில் இறப்பர் புதிய செய்கைகளைப் பரவலாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் மொனராகலையில் 197.72 ஹெக்டேயரும், அம்பாரையில் 212.57 ஹெக்டேயரும், பதுளையில் 49.04 ஹெக்டேயரும், ஹம்பாந்தோட்டையில் 6.36 ஹெக்டேயரும், பாரம்பரியம் அல்லாத பிரதேசங்களில் இவ்வாண்டில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட மொத்தக் காணியின் அளவு 465.69 ஹெக்டேயர் ஆகும்.

## 3. இயற்கை இறப்பர் கைத்தொழில் சார்ந்த தகவல்கள் - 2016 ஆம் ஆண்டு

கடந்த பல ஆண்டுகளாக இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்ட காணி அளவில் கிரமமான அதிகரிப்புக் காண்பிக்கப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் நாட்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த இறப்பர் காணியின் அளவு 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இறப்பர் காணி புள்ளிவிபரப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.1. இறப்பர் செய்கை மேற்கொள்ளும் காணியின் அளவு

**இறப்பர் செய்கைக் காணி அளவு - 2016 ஆம் ஆண்டு**

| | தனியார் துறையினர் (20 ஹெக்டேயரை விடக் குறைந்த காணி) ஹெக் | பிரதேச பெருந்தோட்டக் கம்பனி (20 ஹெக்டேயரை விடக்கூடிய காணி) ஹெக் | மொத்த ஹெக்டேயர் |
|---|---|---|---|
| 2010 ஆம் ஆண்டில் இறப்பர் காணி புள்ளிவிபரங்கள் மூலம் அறிக்கைப்படுத்தப்பட்ட காணி அளவு | 79,395 | 46,250 | 125,645 |
| 2011 ஆம் ஆண்டில் இறப்பர் காணி புள்ளிவிபரங்கள் மூலம் அறிக்கைப்படுத்தப்பட்ட காணி அளவு | 80,018 | 48,516 | 128,534 |
| 2012 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் அளவு | 82,170 | 48,610 | 130,780 |
| 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் அளவு | 85,083 | 48,585 | 133,668 |
| 2014 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் அளவு | 85,100 | 49,037 | 134,137 |
| 2015 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் அளவு | 87,604 | 48,978 | 136,582 |
| 2016 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் அளவு | 87,996 | 48,278 | 136,274 |

**புள்ளிவிபரக் குறிப்பு ii**

இறப்பர் செய்கைகள் மேற்கொள்ளப்படும் காணியின் அளவில் 65% சிறிய மற்றும் நடுத்தரளவு காணித் துண்டுகளாகவும் எஞ்சிய 35% அளவு பெருந்தோட்டக் கம்பனிக்கு உரியதாகவும் காணப்படுகின்றது. இம் மொத்தக் காணி அளவில் முதிராக் காணி அளவு 39,842 ஹெக்டேயரும் பால் வெட்டும் முதிரிந்த காணியின் அளவு 96,438 ஹெக்டேயர் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இச் செய்கை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த உற்பத்தி அளவு 79,099 மெற்றித்தொன் ஆகும். 2016 ஆம் ஆண்டில் இறப்பர் ஒரு

ஹெக்டேயருக்கான பொதுவான வருடாந்த அறுவடை உலர்த்தப்பட்ட இறப்பர் 819 கிலோகிராம் என மதிப்பீடு செய்யப்படுகின்றது.

## 3.2. இறப்பர் உற்பத்தி மற்றும் உற்பத்திச் செலவினம்

### 3.2.1. இறப்பர் உற்பத்தி

2016 ஆம் ஆண்டில் மொத்த இறப்பர் உற்பத்தி 79,099 மெற்றிக்தொன் ஆகும். முன்னைய ஆண்டின் மொத்த உற்பத்தியான 88,567 மெற்றிக்தொன்னுடன் ஒப்பீடு செய்யும்போது 9,488 கிலோகிராம் குறைவினைக் காண்பிக்கின்றது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 11% குறைவினைக் காண்பிக்கின்றது. இவ்வாறு உற்பத்தி குறைவடைவதற்கு பிரதான காரணமாக அமைந்தது. கடந்த ஆண்டுகளில் உலக இறப்பர் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். எமது நாட்டில் இறப்பர் விலை கிரமமாக குறைவடைவதற்கான காரணம் மற்றும் 2016 ஆம் ஆண்டின் முதற் காலப்பகுதியில் காணப்பட்ட பலத்த மழை மற்றும் ஆண்டு இறுதியில் காணப்பட்ட கூடுதலான வரட்சியுடன் கூடிய காலநிலையாகும்.

**2015 மற்றும் 2016 ஆம் ஆண்டில் மொத்த இறப்பர் உற்பத்தி (மெற்றிக்தொன்)**

| ஆண்டு | சீட் இறப்பர் | ஸ்கிரேப் | சோல் கிரேப் | லேடெக்ஸ் கிரேப் | புளொக் இறப்பர் T.S.R | லேடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2015 | 44,392 | 886 | 1,939 | 8,266 | 7,606 | 25,478 | 88,567 |
| 2016 | 39,754 | 791 | 1,575 | 12,618 | 3,864 | 20,497 | 79,099 |

**புள்ளிவிபர குறிப்பு iii**



**உற்பத்தி செய்யப்பட்ட சீட் இறப்பர்**



**டயர் உற்பத்தி**

**2016 ஆம் ஆண்டில் மாவட்ட ரீதியில் இறப்பர் உற்பத்தி**

| மாவட்டம் | மாவட்ட உற்பத்தி மெ.தொன் | தேசிய உற்பத்திக்கு மாவட்டப் பங்களிப்பு |
|---|---:|---:|
| களுத்துறை | 19379.26 | 24.50 |
| கேகாலை | 24528.60 | 31.01 |
| கம்பஹா | 2388.79 | 3.02 |
| குருநாகல் | 1700.63 | 2.15 |
| கண்டி | 972.92 | 1.23 |
| மாத்தளை | 806.81 | 1.02 |
| இரத்தினபுரி | 16863.91 | 21.32 |
| காலி | 4041.96 | 5.11 |
| மாத்தறை | 2721.01 | 3.44 |
| ஹம்பாந்தோட்டை | 31.64 | 0.04 |
| கொழும்பு | 4049.85 | 5.12 |
| மொனராகலை | 854.27 | 1.08 |
| பதுளை | 656.52 | 0.83 |
| புத்தளம் | 7.91 | 0.01 |
| அம்பாரை | 94.92 | 0.12 |
| **மொத்தம்** | **79099** | **100** |

**புள்ளிவிபரக் குறிப்பு iv**

**3.2.2. உற்பத்திச் செலவினம்**

உலர்த்தப்பட்ட ஒரு கிலோ இறப்பரை உற்பத்தி செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் சிறுதோட்டப் பிரிவின் பொதுவான உற்பத்திச் செலவினம் ரூபா. 180.00 ஆகும். முன்னைய ஆண்டின் உற்பத்திச் செலவினம் ரூபா. 170.00 ஆகும். தோட்டக் கம்பனிகளுக்காக 2016 ஆம் ஆண்டின் உற்பத்திச் செலவினம் ரூபா. 286.41 என்பதுடன் முன்னைய ஆண்டில் இதன் பெறுமதி ரூபா. 285.00 ஆகும். அறுவடை குறைவடைந்துள்ளமையினால் உற்பத்திச் செலவினம் அதிகரிக்க வேண்டும். அவ்வாறு உற்பத்திச் செலவினம் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் அதிகரித்திருக்கும் முறை புள்ளிவிபரக் குறிப்பு இலக்கம் v இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இறப்பர் உற்பத்திச் செலவினம் 2002 - 2016**

*(ஒரு கிலோகிராம்/ ரூபா)*

| ஆண்டு | பெருந்தோட்டக் கம்பனி | சிறுதோட்டப் பிரிவு |
|---|---|---|
| 2002 | 55.74 | 54.00 |
| 2003 | 59.76 | 63.30 |
| 2004 | 65.98 | 73.37 |
| 2005 | 72.56 | 77.37 |
| 2006 | 87.65 | 97.20 |
| 2007 | 102.31 | 112.69 |
| 2008 | 119.89 | 114.00 |
| 2009 | 135.83 | 118.56 |
| 2010 | 158.94 | 119.83 |
| 2011 | 188.23 | 129.56 |
| 2012 | 207.00 | 136.00 |
| 2013 | 245.00 | 150.00 |
| 2014 | 280.00 | 160.00 |
| 2015 | 285.00 | 170.00 |
| 2016 | 286.41 | 180.00 |

**புள்ளிவிபரக் குறிப்பு V**

**இறப்பர் உற்பத்திச் செலவினம் 2002 - 2016**



## 3.3. உள்நாட்டு இறப்பர் பயன்பாடு

நாட்டின் உற்பத்திகளின் இயற்கை இறப்பர் கடந்த காலங்களில் பிரதான ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்ப மூலப்பொருளாகக் காணப்பட்டதுடன் தற்போது இந்நிலைமை கிரமமாக மாற்றமடைந்து உள்நாட்டு முடிவுப் பொருள் உற்பத்திக்காக கூடுதலாக இறப்பர் பயன்படுத்துவதில் கூடுதலாக ஆளமான செயற்பாடுகள் இருப்பதைக் காணமுகின்றது. இதற்கமைய 2016 ஆம் ஆண்டில் உள்நாட்டில் 141,940 மெற்றிக்தொன் இயற்கை இறப்பர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இறப்பர் உற்பத்தி கடந்த ஆண்டைவிடக் குறைவடைந்துள்ளமையினால் கடந்த ஆண்டில் இறப்பர் மொத்த அடிப்படையிலும் உள்நாட்டு நுகர்வு உட்பட ஏற்றுமதிக்காகவும் இவ்வாண்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாண்டில் இறக்குமதி செய்யப்படட இறப்பர் அளவு 72,985 மெற்றிக்தொன் ஆகும். இந்தளவும் உள்நாட்டுப் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 3.4. மூலப்பொருளாக இயற்கை இறப்பர் ஏற்றுமதி

கடந்த 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 2016 ஆம் ஆண்டில் இலங்கையில் இறப்பர் ஏற்றுமதியில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

**2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பர் அளவு**

| மாதம் | ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு (மெ.தொன்) | |
|---|---|---|
| | 2015 ஆம் ஆண்டு | 2016 ஆம் ஆண்டு |
| ஜனவரி | 875 | 1245 |
| பெப்ரவரி | 961 | 1367 |
| மார்ச் | 1001 | 1495 |
| ஏப்ரல் | 1102 | 1344 |
| மே | 1067 | 1207 |
| ஜூன் | 964 | 930 |
| ஜூலை | 713 | 711 |
| ஆகஸ்ட் | 621 | 1008 |
| செப்ரெம்பர் | 803 | 1142 |
| ஒக்டோபர் | 751 | 1935 |
| நவம்பர் | 665 | 2007 |
| டிசம்பர் | 850 | 1776 |
| **மொத்தம்** | 10373 | 16167 |

**புள்ளிவிபரக் குறிப்பு vi**




**இறப்பர் ஏற்றுமதி 2015 மற்றும் 2016**

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பர் அளவு வகைகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பர் அளவு வகைகளுக்கமைய**

**(மெற்றிக்தொன்)**

| ஆண்டு | சீட் இறப்பர் | ஸ்கிரேப் | சோல் கிரேப் | லேடெக்ஸ் கிரேப் | புளொக் இறப்பர் T.S.R | லேடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2015** | 903 | 1847 | 13 | 6888 | 417 | 305 | 10373 |
| **2016** | 1630 | - | 1500 | 10515 | 1141 | 1381 | 16167 |

**புள்ளிவிபரக் குறிப்பு vii**

மொத்தமாக ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பர் அளவில் க.த.இ (F.O.B) பெறுமதி viii இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மொத்தமாக ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பர் அளவில் க.த.இ பெறுமதி**

| ஆண்டு | ஏற்றுமதி அளவு மெற்றிக்தொன் | மொத்தப் பெறுமதி ரூபா. மில் | ஒரு கிலோகிராமிற்கு பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| **2015** | 10373 | 3547.90 | 342.03 |
| **2016** | 16167 | 4758 | 294.33 |

**புள்ளிவிபரக் குறிப்பு viii**

இறப்பர் ஏற்றுமதி பிரதானமாக தனியார்த் துறையினால் மேற்கொள்ளப்படுகின்றது. தனியார் துறையில் பதிவு செய்யப்பட்ட 120 ஏற்றுமதியாளர்கள் உள்ளனர். அவ் ஏற்றுமதியாளர்கள் 120 பேர்களும் இத் திணைக்களத்தில் 2016 ஆம் ஆண்டுக்காக பதிவுசெய்து கொண்டுள்ளனர்.

**இறப்பரை விலைக்குக் கொள்வனவு செய்யும் பிரதான நாடுகள் 2016**

**(மெற்றிக்தொன்)**

| நாடு | கொள்வனவு செய்யப்பட்ட அளவு | % |
|---|---|---|
| பாக்கிஸ்தான் | 3009 | 19 |
| மலேசியா | 2595 | 16 |
| ஜப்பான் | 1525 | 9 |
| ஜேர்மன் | 1474 | 9 |
| இத்தாலி | 1060 | 7 |
| அமெரிக்கா | 882 | 5 |
| இந்தியா | 761 | 5 |
| சீனா | 744 | 4 |
| தென்னாபிரிக்கா | 548 | 3 |
| ஸ்பெயின் | 162 | 1 |
| ஐக்கிய இராட்சியம் | 90 | 1 |
| ஹொங்கொங் | 85 | 1 |
| ஏனையவை | 3232 | 20 |
| **மொத்தம்** | **16167** | **100** |

**புள்ளிவிபரக் குறிப்பு ix**

## 3.5. இறப்பர் இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள் - 2016

| மாதம் | அளவு (மெற்றிக்தொன்) |
|---|---|
| ஜனவரி | 5845 |
| பெப்ரவரி | 6398 |
| மார்ச் | 3098 |
| ஏப்ரல் | 6495 |
| மே | 12947 |
| ஜூன் | 7202 |
| ஜூலை | 5210 |
| ஆகஸ்ட் | 4482 |
| செப்ரெம்பர் | 4208 |
| ஒக்டோபர் | 9605 |
| நவம்பர் | 4382 |
| டிசம்பர் | 3113 |
| **மொத்தம்** | 72985 |

**புள்ளிவிபரக் குறிப்பு x**

**2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட இயற்கை இறப்பர் அளவு வகைகளுக்கமைய**

**(மெற்றிக்தொன்)**

| ஆண்டு | சீட் இறப்பர் | ஸ்கிரேப் | சோல் கிரேப் | லேடெக்ஸ் கிரேப் | புளொக் இறப்பர் T.S.R | லேடெக்ஸ் மற்றும் ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2015** | 38182 | 0 | 0 | 0 | 892 | 15302 | **54,376** |
| **2016** | 51540 | - | - | - | 3152 | 18293 | **72985** |

**புள்ளிவிபரக் குறிப்பு xi**

**மொத்த இறப்பர் இறக்குமதி - 2016**

**(மெற்றிக்தொன்)**

| வகைகள் | இறக்குமதி செய்யப்பட்ட அளவு மெ.தொன் | இறக்குமதி பெறுமதி ரூபா. மில் |
|---|---|---|
| இயற்கை இறப்பர் | 72984.91 | 15619.28 |
| செயற்கை இறப்பர் | 69491.34 | 15,351.75 |
| மீள் தயாரிக்கப்பட்ட இறப்பர் | 21962.93 | 1978.92 |
| ஸ்கிரெப் இறப்பர் | 12155.94 | 743.00 |
| இணைந்த இறப்பர் | 7530.21 | 2,075.88 |
| பகுதி ஏனைய முடிவுப் பொருள் வகைகள் | 6549.66 | 765.71 |
| முடிவுப் பொருள் உற்பத்தி (kg) | 9582.27 | 8,523.04 |
| முடிவுப் பொருள் உற்பத்தி (எண்ணிக்கை) | 6787.30 | 12,708.02 |

**புள்ளிவிபரக் குறிப்பு xii**

## 3.6. இறப்பர் விலை

உலகளாவிய மொத்தத் தேசிய உற்பத்தியின் மந்தகதியிலான அபிவிருத்திகள் காரணமாக இயற்கை இறப்பருக்கான கேள்வி குறைவடைந்தமையினால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இறப்பர் விலை குறைந்து காணப்படுவதுடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இறப்பர் விலை கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

**இறப்பர் வகைகளுக்கமைய சாதாரண விலை**

***(ஒரு கிலோவிற்கு ரூபா)***

| ஆண்டு | வருடாந்த சாதாரண விலை | | |
|---|---|---|---|
| | சீட் இறப்பர் இலக்கம் 01 | ஸ்கிரெப் கிரேப் இலக்கம் 1 XBR | லேடெக்ஸ் கிரேப் இலக்கம் IX |
| **2015** | 245.93 | 187.74 | 299.17 |
| **2016** | 238.97 | 179.56 | 262.38 |

**புள்ளிவிபரக் குறிப்பு xiii**

# 2016 ஆம் ஆண்டின் மாதாந்த இறப்பர் விலை

ரூபாய்

| மாதம் | சீட் இறப்பர் (ஆர்.எஸ்.எஸ்) | | | | | லேடெக்ஸ் கிரேப் | | | | | கிரோப் குரோப் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | IX | 1 | 2 | 3 | 4 | 1XBR | 2XBR | 3XBR | 4 | FB | SKIM |
| ஜனவரி | 228.00 | 188.67 | ச.ப.இ | ச.ப.இ | ச.ப.இ | 285.60 | 284.00 | 267.38 | 225.13 | 161.21 | 159.11 | 157.67 | 155.88 | 153.84 | 150.00 | 124.67 |
| பெப்ரவரி | 194.00 | 189.25 | 186.00 | 179.25 | ச.ப.இ | 289.38 | 286.31 | 267.86 | 227.25 | 144.94 | 141.84 | 141.33 | 142.34 | 140.43 | ச.ப.இ | 116.36 |
| மார்ச் | 208.68 | 205.47 | 190.00 | 181.50 | 182.00 | 287.14 | 283.14 | 258.63 | 243.67 | 149.89 | 145.31 | 142.25 | 147.13 | 142.50 | 136.50 | 116.50 |
| ஏப்ரல் | 232.63 | ச.ப.இ | 230.50 | ச.ப.இ | 212.00 | 278.75 | 276.00 | 252.42 | 227.33 | 179.17 | 169.83 | 164.56 | 166.25 | 159.33 | 155.50 | 126.56 |
| மே | 245.33 | 239.00 | 240.00 | ச.ப.இ | ச.ப.இ | 274.01 | 272.17 | 237.25 | 210.67 | 179.17 | 169.29 | 162.75 | 165.70 | 158.98 | 137.00 | 135.63 |
| ஜூன் | 268.92 | ச.ப.இ | 255.00 | ச.ப.இ | 232.13 | 270.00 | 262.71 | 226.50 | 205.78 | 181.00 | 172.33 | 167.43 | 162.21 | 157.06 | 135.00 | 134.06 |
| ஜூலை | 254.38 | 247.50 | 243.33 | ச.ப.இ | 233.25 | 264.83 | 259.57 | 226.07 | 214.00 | 213.63 | 188.57 | 179.63 | 168.44 | 160.36 | 142.05 | 141.28 |
| ஆகஸ்ட் | 229.33 | 228.47 | 215.50 | 214.00 | 214.50 | 234.71 | 231.00 | 208.75 | 200.10 | 189.81 | 174.33 | 171.80 | 175.11 | 166.78 | 152.00 | 143.58 |
| செப்ரெம்பர் | 225.23 | 221.38 | 218.50 | 216.80 | ச.ப.இ | 222.43 | 218.88 | 205.63 | 193.00 | 175.31 | 172.13 | 171.00 | 170.64 | 162.96 | 152.50 | 132.90 |
| ஒக்டோபர் | 236.40 | 233.08 | 232.25 | 226.50 | ச.ப.இ | 228.00 | 220.63 | 210.50 | 203.38 | 190.75 | 183.50 | 180.75 | 179.05 | 172.50 | 164.00 | 142.22 |
| நவம்பர் | 259.57 | 257.03 | 250.88 | 248.23 | ச.ப.இ | 235.33 | 234.52 | 230.40 | 228.69 | 226.92 | 220.88 | 217.04 | 204.28 | 202.26 | 173.50 | 189.81 |
| டிசம்பர் | 285.21 | 283.00 | 283.00 | 297.00 | 284.00 | 278.33 | 275.00 | 269.07 | 265.21 | 266.45 | 257.60 | 252.67 | 242.50 | 240.00 | 219.50 | 223.00 |
| பொதுவான | **238.97** | **229.28** | **231.36** | **223.33** | **226.31** | **262.38** | **258.66** | **238.37** | **220.35** | **188.19** | **179.56** | **175.74** | **173.29** | **168.08** | **156.14** | **143.88** |

❖ ச.ப.இ - சமர்ப்பிக்கப்படவில்லை.

வருடாந்த சாதாரண விலை

புள்ளிவிபரக் குறிப்பு **xiv**

## 3.7. இறப்பர் வர்த்தகர்கள்

இறப்பர் வர்த்தகத்திற்காக அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வது சட்ட ரீதியிலான சேவையாகக் காணப்படுவதுடன் 2016 ஆம் ஆண்டில் 850 இறப்பர் வர்த்தகர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதுடன் புதிதாக 28 அனுமதிப் பத்திரங்கள் புதிப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 2016 ஆம் ஆண்டில் 878 இறப்பர் வர்த்தகர்கள் இத் திணைக்களத்தில் பதிவுசெய்து கொண்டுள்ளனர். மாவட்ட அடிப்படையில் இவ் வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு வழங்கப்பட்டன.

| மாவட்டங்கள் | புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | புதிதாக வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 58 | - |
| கம்பஹா | 31 | - |
| களுத்துறை | 237 | 04 |
| இரத்தினபுரி | 164 | 08 |
| கேகாலை | 270 | 10 |
| குருநாகல் | 12 | - |
| கண்டி | 08 | - |
| மாத்தளை | 03 | - |
| காலி | 30 | 02 |
| மாத்தறை | 25 | - |
| ஹம்பாந்தோட்டை | - | - |
| மொனராகலை | 11 | 04 |
| பதுளை | 01 | - |
| **மொத்தம்** | **850** | **28** |

**புள்ளவிபரக் குறிப்பு xv**

## 3.8. இறப்பர் மீள் செய்கை/ புதிய செய்கை மானிய உதவித் திட்டம்

மானிய உதவித் திட்டத்தின் கீழ் இறப்பர் மீள் அல்லது புதிய செய்கைகளை மேற்கொள்வதற்காக 1953 இலக்கம் 36 கொண்ட இறப்பர் மீள் செய்கைச் சட்டத்தின் 07 வது வாசகத்திற்கமைய அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். இச் சட்டத்திற்கமைய சகல இறப்பர் காணிகளும் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்ட இறப்பர் காணிகளில் காணப்படும் செய்கையின் காலம் 20 வருடங்களைத் தாண்டியதும் இக்காணி மானிய உதவித் திட்டத்தின் கீழ் மீள செய்கைகளை மேற்கொள்வதற்காக அனுமதிப்பத்திரத்தைப் பெறுவது பொருத்தமானதாகும்.

இறப்பர் செய்கையில் ஈடுபடுவோரைத் தொடர்ந்தும் ஊக்குவிப்பதற்காக ஹெக்டேயருக்கு ரூபா. 125,000 மீள் செய்கை, புதிய செய்கை மானிய உதவி நிதி 2011 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அதிகரிக்கப்பட்டது.

புதிய செய்கைகளுக்காக ஹெக்டேயருக்கு ரூபா 150,000
மீள் செய்கைக்காக ஹெக்டேயருக்கு ரூபா. 175,000

இவ் உதவி நிதி 08 தவணைகளின் கீழ் செலுத்தப்படும் தவணை நிதி செலுத்தப்படும் முறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| **தவணை** | **புதிய செய்கை ஹெக்டேயருக்கு (நிதி ரூபாக்களில்)** | **மீள் செய்கை ஹெக்டேயருக்கு (நிதி ரூபாக்களில்)** |
|---|---|---|
| முதலாவது தவணை (01) | 6,000.00 | 8,000.00 |
| இரண்டாவது தவணை (02) | 36,000.00 | 43,000.00 |
| மூன்றாவது தவணை (03) | 12,000.00 | 15,000.00 |
| நான்காவது தவணை (04) | 18,000.00 | 21,000.00 |
| ஐந்தாவது தவணை (05) | 18,000.00 | 21,000.00 |
| ஆறாவது தவணை (06) | 18,000.00 | 21,000.00 |
| ஏழாவது தவணை (07) | 19,000.00 | 22,000.00 |
| எட்டாவது தவணை (08) | 23,000.00 | 24,000.00 |
| **மொத்தம்** | **150,000.00** | **175,000.00** |

**புள்ளவிபரக் குறிப்பு xvi**

## 3.9. புதிய செய்கைகள் உள்ளடங்கலாக இறப்பர் செய்கையின் முன்னேற்றங்கள்

இறப்பர் அபிவிருத்திக்காக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கமைய நாட்டின் இறப்பர் கைத்தொழிலை பலம்மிக்க பொருளாதாரச் செயற்திட்டமாக முன்னெடுப்பதற்காக நீண்ட காலத்தைக் கொண்ட, காலாவதியான மற்றும் பொருளாதார ரீதியில் பயனற்ற இறப்பர் செய்கையிலிருந்து விலகி அக் காணிகளில் மீள் செய்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பயன்மிக்க செய்கைகளை முன்னெடுப்பதற்காக மொத்த இறப்பர் காணியில் 3% மேனும் வருடாந்தம் மீள பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அக்காணி அளவில் மொத்த அடிப்படையில் 4000 ஹெக்டேயர் ஆகும். 2016 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மீள் செய்கை/ புதிய செய்கை இறப்பர் காணிகளின் அளவு 7000 ஹெக்டேயர் ஆகும். 2016 ஆம் ஆண்டிற்கு மீள் செய்கைகளை மேற்கொள்வதற்காக இலக்காகக் கொண்ட காணி அளவு சிறு தோட்டத்தின் 2700 ஹெக்டேயர் மற்றும் தோட்டக் கம்பனியின் கீழ் மீள் செய்கை அளவு 1500 ஹெக்டேயர் என்ற அடிப்படையில் 4200 ஹெக்டேயர் ஆகும். ஆண்டுக்குள் புதிய செய்கைகளை இலக்காகக் கொண்ட சிறு தோட்டங்களின் கீழ் பாரம்பரிய பிரதேசங்களில் 1800 ஹெக்டேயர் மற்றும்

பாரம்பரியமல்லாத பிரதேசங்களில் 1000 ஹெக்டேயர் என்ற அடிப்படையில் சுமார் 2800 ஹெக்டேயர் ஆகும்.

மீள் செய்கை மற்றும் புதிய செய்கை மானிய உதவித் திட்டத்தின் கீழ் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்கள், வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரியவாறு செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட காணி அளவு புள்ளிவிபரக் குறிப்பு xviii மற்றும் xix இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இறப்பர் மீள் செய்கை மானிய உதவித் திட்டத்தின் கீழ் மீள் செய்கை மேற்கொள்ளப்பட்ட காணி அளவு (சிறு தோட்ட உரிமையாளர்கள்) 2016 ஆம் ஆண்டு

*(ஹெக்டேயர்)*

| மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவம் | | வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் | | மீள் செய்கை மேற்கொள்ளப்பட்ட காணி அளவு | |
|---|---|---|---|---|---|---|
| | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணி அளவு (ஹெக்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணி அளவு (ஹெக்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணி அளவு (ஹெக்) |
| களுத்துறை | 479 | 320.23 | 476 | 317.79 | 251 | 151.07 |
| கேகாலை | 684 | 478.1 | 506 | 351.13 | 276 | 163.26 |
| கம்பஹா | 100 | 80.89 | 65 | 44.67 | 43 | 28.11 |
| குருநாகல் | 14 | 32.59 | 14 | 30.23 | 03 | 7.16 |
| கண்டி | 28 | 28.85 | 26 | 27.99 | 08 | 5.18 |
| மாத்தளை | 01 | 7.91 | 01 | 7.91 | - | - |
| இரத்தினபுரி | 200 | 160.78 | 201 | 167.22 | 114 | 90.42 |
| காலி | 14 | 11.68 | 13 | 10.97 | 09 | 4.38 |
| மாத்தறை | 25 | 27.48 | 23 | 24.35 | 07 | 4.15 |
| மொனராகலை | 1 | 0.81 | 1 | 0.81 | 1 | 0.81 |
| கொழும்பு | 130 | 93.94 | 137 | 108.50 | 108 | 83.46 |
| **மொத்தம்** | **1676** | **1243.26** | **1463** | **1091.57** | **820** | **538** |

**புள்ளிவிபரக் குறிப்பு xvii**

## இறப்பர் புதிய செய்கை மானிய உதவித் திட்டத்தின் கீழ் செய்கை மேற்கொள்ளப்பட்ட காணி அளவு (சிறு தோட்ட உரிமையாளர்கள்) 2016 ஆம் ஆண்டு

*(ஹெக்டேயர்)*

| மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவம் | | வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் | | புதிதாக செய்கை மேற்கொள்ளப்பட்ட காணி அளவு | |
|---|---|---|---|---|---|---|
| | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணி அளவு (ஹெக்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணி அளவு (ஹெக்) | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | காணி அளவு (ஹெக்) |
| களுத்துறை | 111 | 43.62 | 109 | 42.19 | 64 | 25.65 |
| கேகாலை | 295 | 143.54 | 234 | 86.26 | 130 | 46.55 |
| கம்பஹா | 39 | 17.75 | 31 | 13.01 | 28 | 11.87 |
| குருநாகல் | 17 | 15.02 | 14 | 12.26 | 07 | 4.58 |
| கண்டி | 21 | 11.74 | 16 | 6.29 | 11 | 4.32 |
| மாத்தளை | 01 | 0.81 | 01 | 0.81 | - | - |
| இரத்தினபுரி | 100 | 57.28 | 82 | 47.99 | 37 | 18.23 |
| காலி | 23 | 12.16 | 23 | 12.04 | 06 | 4.35 |
| மாத்தறை | 17 | 16.56 | 14 | 14.64 | 06 | 4.74 |
| ஹம்பாந்தோட்டை | 20 | 14.54 | 20 | 12.83 | 08 | 6.36 |
| கொழும்பு | 27 | 21.47 | 30 | 22.16 | 15 | 6.49 |
| மொனராகலை | 407 | 240.7 | 394 | 232.99 | 344 | 197.72 |
| பதுளை | 78 | 61.10 | 70 | 55.84 | 58 | 49.04 |
| அம்பாரை | 203 | 186.19 | 198 | 181.74 | 228 | 212.57 |
| **மொத்தம்** | **1359** | **842.48** | **1236** | **741.05** | **942** | **592.47** |

**புள்ளிவிபரக் குறிப்பு xviii**

**இறப்பர் மீள் செய்கை மானிய உதவித் திட்டத்தின் கீழ் மீள் செய்கை மேற்கொள்ளப்பட்ட காணி அளவு (தோட்டப் பிரிவு) 2016**

| பிரதேச அலுவலகம் | செய்கை மேற்கொள்ளப்பட்ட காணி அளவு (ஹெக்டேயர்) |
|---|---|
| களுத்துறை | 71.91 |
| கேகாலை | 178.75 |
| காலி | 17.04 |
| மொனராகலை | 9.27 |
| இரத்தினபுரி | 59.18 |
| **மொத்தம்** | **336.15** |

**புள்ளிவிபரக் குறிப்பு xix**



# இறப்பர் மீள் செய்கைக் காணி அளவு 1990 - 2016

(ஹெக்டேயர்)

| ஆண்டு | சிறுதோட்டப் பிரிவு | பெருந்தோட்டக் கம்பனி | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 3584 | 1617 | 5201 |
| 1991 | 3507 | 1794 | 5301 |
| 1992 | 2028 | 1889 | 3917 |
| 1993 | 2419 | 2817 | 5236 |
| 1994 | 1623 | 2138 | 3761 |
| 1995 | 1778 | 1461 | 3239 |
| 1996 | 1983 | 1217 | 3200 |
| 1997 | 1172 | 2045 | 3217 |
| 1998 | 1173 | 2542 | 3715 |
| 1999 | 665 | 3866 | 4531 |
| 2000 | 770 | 1853 | 2623 |
| 2001 | 558 | 4584 | 5142 |
| 2002 | 712 | 2066 | 2778 |
| 2003 | 565 | 494 | 1059 |
| 2004 | 819 | 1264 | 2083 |
| 2005 | 1257 | 2329 | 3586 |
| 2006 | 1122 | 2331 | 3453 |
| 2007 | 993 | 4199 | 5192 |
| 2008 | 812 | 5293 | 6105 |
| 2009 | 1002 | 5360 | 6362 |
| 2010 | 1186 | 4756 | 5942 |
| 2011 | 1123 | 1927 | 3050 |
| 2012 | 1117 | 2126 | 3243 |
| 2013 | 1710 | 2784 | 4494 |
| 2014 | 1343 | 1554 | 2897 |
| 2015 | 614 | 1303 | 1917 |
| 2016 | 538 | 336.15 | 874.15 |

புள்ளிவிபரக் குறிப்பு xx

## இறப்பர் புதிய செய்கைக் காணி அளவு 1990 - 2016

(ஹெக்டேயர்)

| ஆண்டு | சிறுதோட்டப் பிரிவு | பெருந்தோட்டக் கம்பனி | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 1039 | 258 | 1297 |
| 1991 | 1602 | 202 | 1804 |
| 1992 | 612 | 302 | 914 |
| 1993 | 907 | 135 | 1042 |
| 1994 | 670 | 37 | 707 |
| 1995 | 651 | 45 | 696 |
| 1996 | 1208 | 35 | 1243 |
| 1997 | 793 | 21 | 814 |
| 1998 | 516 | 17 | 533 |
| 1999 | 223 | 48 | 271 |
| 2000 | 243 | 34 | 277 |
| 2001 | 150 | 14 | 164 |
| 2002 | 227 | 7 | 234 |
| 2003 | 451 | 7 | 458 |
| 2004 | 518 | 5 | 523 |
| 2005 | 1032 | 11 | 1043 |
| 2006 | 1603 | 297 | 1900 |
| 2007 | 1701 | 333 | 2034 |
| 2008 | 2755 | 414 | 3169 |
| 2009 | 1994 | 275 | 2269 |
| 2010 | 2857 | 96 | 2953 |
| 2011 | 2166 | 838 | 3004 |
| 2012 | 2297 | 1086 | 3383 |
| 2013 | 2979 | 912 | 3891 |
| 2014 | 1428 | 133 | 1561 |
| 2015 | 769 | 56 | 825 |
| 2016 | 592 | - | 592 |

**புள்ளிவிபரக் குறிப்பு xxi**

## 3.10. மானிய உதவிக் கொடுப்பனவு

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டுக்குள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அவ்வவ் செய்கைகளுக்காக மானிய உதவி நிதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள திணைக்களத்திற்கு முடிந்தது.

**இறப்பர் செய்கைக்கான மானிய உதவிக் கொடுப்பனவு**

| செயற்திட்டம் | செலுத்தப்பட்ட மொத்த நிதி (ரூபா.மில்) |
|---|---|
| 2016 மீள் செய்கை மானிய உதவி (சிறு தோட்டம்) | 192.98 |
| 2016 புதிய செய்கை மானிய உதவி (சிறு தோட்டம்) | 179.90 |
| 2016 மீள் செய்கை மானிய உதவி (பெருந்தோட்டக் கம்பனி) | 144.53 |
| **மொத்தம்** | 517.41 |

**புள்ளிவிபரக் குறிப்பு xxii**

## 3.11. இறப்பர் கன்று நாற்றுமேடை மற்றும் கன்றினை வழங்குதல்.

இறப்பர் செய்கை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இறப்பர் செய்கை தொடர்பில் பெருந்தோட்டக் கைத்தொழிலாளர்களின் ஆர்வம் கூடுதலாகக் காணப்படுகின்றது. இதனால் இறப்பர் கன்றுகளின் கேள்வி தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. இதற்காக கன்று உற்பத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்த இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்காகத் திணைக்களத்தின் இறப்பர் கன்று நாற்றுமேடையைப் போன்று தனியார் இறப்பர் கன்று நாற்றுமேடைகளையும் ஆரம்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தனியார் இறப்பர் கன்று நாற்றுமேடை மற்றும் வர்த்தக இறப்பர் கன்று நாற்றுமேடையினை தாபிப்பதற்காகத் திணைக்களத்தினால் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆரம்பக் கட்டங்களில் இந் நாற்றுமேடைகள் உயர்தரத்திலான ஒட்டுக்கிளை நாற்று மேடையைத் தாபிப்பதற்காகத் தேவையான நடுகைப் பொருட்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான நாற்றுமேடைகள் மூலம் வழங்கப்படுகின்றன.

### 3.11.1 அரச நாற்றுமேடை

அரசாங்கத்தின் நாற்றுமேடைகளின் கன்று உற்பத்தி மற்றும் கன்று வழங்கல் - 2016

| நாற்று மேடையின் பெயர் | நாற்றுமேடை அடங்கும் மாவட்டம் | கன்று உற்பத்தி | கன்று விநியோகம் |
|---|---|---|---|
| கரபிஞ்சா | இரத்தினபுரி | 52987 | 74923 |
| மீரிகம | கம்பஹா | 90968 | 98539 |
| வலிகடமுல்ல | கம்பஹா | 173582 | 160451 |
| அகல்லஓயா | களுத்துறை | 225093 | 178742 |
| கும்புக்கனை | மொனராகலை | 411121 | 354471 |
| கிரவான | அம்பாரை | 30606 | - |
| குருகொட | களுத்துறை | 141330 | 132737 |
| முத்தெனிய | ஹம்பாந்தோட்டை | 79061 | 37400 |
| **மொத்தம்** | | **1204748** | **1037263** |

**புள்ளிவிபரக் குறிப்பு xxiii**




திணைக்களத்தில் இறப்பர் கன்று நாற்றுமேடைகள் மூலம் 2016 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப் பட்ட கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்ட அளவு 1.65 மில்லியனாகும். இதன்மூலம் ஆண்டின் மொத்தக் கன்று உற்பத்தி 1.20 மில்லியன் கன்றுகள் என்பதுடன் ஆண்டுக்குள் விநியோகிக்க முடிந்தது. 1.04 மில்லியனாகும். திணைக்களத்தினால் புதிய இறப்பர் கன்று நாற்றுமேடை அம்பாரை மாவட்டத்தின் பதியத்தலாவையில் தாபிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இவ் நாற்று மேடையில் மரக் கன்று செய்கை ஆரம்பிக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் இதன் ஆரம்பத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கன்று 30,606 ஆகும்.

### 3.11.2. தனியார் மற்றும் வர்த்தக நாற்றுமேடை அனுமதிப் பத்திரம் 2016

உயர்தரத்திலான ஒட்டு இறப்பர் கன்றுகளை பெருந்தோட்டக் கைத்தொழிலாளர்களுக்கு வழங்குவதே திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். திணைக்கள நாற்றுமேடைகளில் கன்று உற்பத்திக் கொள்ளளவினை அதிகரிப்பதும் கன்றுகளின் பண்புசார் தரத்தை விருத்திசெய்து முன்னேற்றுதல் மற்றும் நாற்றுமேடை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் நாற்றுமேடை அபிவிருத்திப் பணிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. தனியார்த் துறையின் நாற்றுமேடையையும் உயர்ந்த கன்று உற்பத்திக்காக ஈடுபடுத்துவது திணைக்களத்தின் பயணியாகும். பரிந்துரை செய்யப்பட்ட தாபிக்கப்பட்டுள்ள கன்று நாற்றுமேடைக்காக அனுமதிப்பத்திரத்தை வழங்கும் செயற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. அனுமதிப்பத்திரங்கள் வெளியிட்ட தனியார் மரக்கன்று நாற்றுமேடை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் தொடர்ந்தும் மேற்பார்வைக்குட்படுத்தப்படுவதுடன் கன்று நாற்றுமேடைகளைப் பரிந்துரை செய்யப்பட்டவாறு முன்னெடுப்பதற்காகத் தேவையான ஆலோசனைகளும் வழங்கப் படுகின்றன. இவ் நாற்றுமேடை பரிந்துரை செய்யப்பட்டவாறு முன்னெடுக்கப்படுகின்றதா என்பது குறித்து பின்னூட்டல்களை மேற்கொள்ளும் செயற்பாடுகள் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**இறப்பர் கன்று உற்பத்தி (தனியார் இறப்பர் கன்று நாற்றுமேடை 2016)**

| பிரதேச அலுவலக அதிகாரப் பிரதேசங்கள் | பதிவு செய்யப்பட்ட நாற்று மேடைகளின் எண்ணிக்கை | கன்று உற்பத்தி | கன்று விநியோகம் |
|---|---|---|---|
| கேகாலை | 92 | 386618 | 99793 |
| கம்பஹா | 12 | 23750 | 4163 |
| களுத்துறை | 07 | 65426 | 30171 |
| மொனராகலை | 01 | 31461 | - |
| காலி | 06 | 47015 | 8357 |
| மாத்தறை | 01 | 1700 | 1700 |
| இரத்தினபுரி | 07 | 135400 | 36550 |
| கொழும்பு | 09 | 213500 | 2900 |
| **மொத்தம்** | **135** | **904870** | **183634** |

**புள்ளிவிபரக் குறிப்பு xxiv**

## 3.12 இடைக்கால பயிர்ச் செய்கை

இறப்பருடன் இடைக்கால பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் சிறு காணி உரிமையாளர்களுக்காக இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் பரிந்துரை செய்யப்பட்டவாறு ஏக்கருக்கு ரூபா. 4000.0 மானிய உதவிக் கொடுப்பனவு இத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றன. இதற்கமைய 2016 ஆம் ஆண்டில் இடைக்கால பயிர் மானிய உதவி அடிப்படையில் ரூபா. 1.20 மில்லியன் நிதி செலுத்தப்பட்டது.



இறப்பருடன் வாழை செய்கை மேற்கொள்ளப்பட்ட காணி

**2016 ஆம் ஆண்டில் இடைக்காலப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட காணி அளவு**

| மாவட்டங்கள் | பயிர்ச் செய்கைக் காணி அளவு (ஹெக்) | பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கேகாலை | 31.26 | 23 |
| கம்பஹா | 24.83 | 26 |
| குருநாகல் | 7.30 | 07 |
| கண்டி | 1.11 | 04 |
| களுத்துறை | 23.02 | 30 |
| இரத்தினபுரி | 3.37 | 03 |
| கொழும்பு | 45.16 | 52 |
| காலி | 0.81 | 01 |
| ஹம்பாந்தோட்டை | 2.53 | 05 |
| மொனராகலை | 44.11 | 62 |
| **மொத்தம்** | **183.50** | **213** |

**புள்ளிவிபரக் குறிப்பு XXV**




### 3.13. மழைப் பாதுகாப்பு கவசப் பயன்பாட்டினைப் பிரபல்யப்படுத்தல்.

முதிர்ந்த இறப்பர் செய்கைக் காணிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக இறப்பர் செய்கையாளர்களுக்கு மழைப் பாதுகாப்பு கவசங்களைப் பயன்படுத்துவதற்கு ஆர்வமூட்டுவதற்காக இவ் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. வெற்றிகரமாக மழைக் கவசங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள மரங்களுக்கு அதற்காக செலவாகும் நிதியில் 50% அதாவது 30 ரூபா நிதி மானிய உதவியாகச் செலுத்தப்படுகின்றது.

சிறுதோட்ட மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்காக இத்திட்டத்தின் கீழ் மானிய உதவிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வேலைத்திட்டத்தின் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மழைக் கவசங்களைப் பயன்படுத்தல்.**

| பிரிவு | மழைக் கவசங்கள் பயன்படுத்தப்பட்ட அளவு (ஹெக்) | மானிய உதவியாக செலுத்தப்பட்ட நிதி ரூபா .மில் |
|---|---|---|
| சிறுதோட்டம் | 182.65 | 2.69 |
| பெருந்தோட்டக் கம்பனி | 2452.52 | 20.34 |
| **மொத்தம்** | **2635.17** | **23.03** |

**புள்ளிவிபரக் குறிப்பு xxvi**

### 3.13.1. மழைக் கவசங்களை இடுதல் மாவட்ட அடிப்படையில்

| மாவட்டங்கள் | பெருந்தோட்டக் கம்பனிகள் (ஹெக்) | மழைக் கவசம் இடப்பட்ட பெருந்தோட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | சிறுதோட்டம் (ஹெக்) | மழைக் கவசம் இடப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 73.39 | 01 | 60.98 | 15 |
| கொழும்பு | - | - | 24.10 | 06 |
| கேகாலை | 1840.52 | 01 | 51.97 | 28 |
| கம்பஹா | - | - | 4.56 | 06 |
| குருநாகல் | 355.71 | 01 | - | - |
| கண்டி | - | - | 2.02 | 03 |
| காலி | 9.88 | 01 | 3.69 | 01 |
| மாத்தறை | - | - | 14.53 | 11 |
| களுத்துறை | 173.02 | 01 | 20.80 | 08 |
| **மொத்தம்** | **2452.52** | **05** | **182.65** | **78** |

**புள்ளிவிபரக் குறிப்பு xxvii**

### 3.14. இறப்பர் செய்கைக்காக உர மானியம் வழங்குதல்

கடந்த சில ஆண்டுகளாக உலகில் இறப்பருக்கான விலை வீழ்ச்சியடைந்துமையினால் உலக இறப்பர் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தது. இதனால் இலங்கையிலும் இறப்பர் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. இறப்பர் விவசாயிகள் இறப்பர் செய்கைகளை மேற்கொள்வதில் மிகக் குறைந்த ஆர்வத்தையே செலுத்தினார்கள். இதனால் இறப்பர் விவசாயிகளை இறப்பர் செய்கையின் மீது ஈடுபடுத்துவதற்காக இறப்பருக்காக பசளை மானியம் வழங்கும் வேலைத்திட்டம் அரசாங்கத்தினால் 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப் பட்டது. பசளை மானியம் ஒரு ஹெக்டேயரை விடக்குறைந்த சிறு இறப்பர் காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கமைய ஒரு ஹெக்டேயருக்காக பசளை மானியமாக 5000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

இதன் முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| மாவட்டம் | பசளை மானியம் செலுத்தப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | பசளை மானியம் செலுத்தப்பட்ட ஹெக்டேயர் அளவு | பசளை மானிய உதவி செலுருத்தப்பட்ட நிதி (ரூபா. மில்) |
|---|---|---|---|
| கேகாலை | 9136 | 4172 | 20.86 |
| கம்பஹா | 1019 | 498 | 2.49 |
| களுத்துறை | 8125 | 3550 | 17.75 |
| இரத்தினபுரி | 5630 | 2440 | 12.20 |
| கொழும்பு | 1420 | 898 | 4.49 |
| காலி | 862 | 404 | 2.02 |
| மாத்தறை | 1195 | 592 | 2.96 |
| ஹம்பாந்தோட்டை | 266 | 134 | 0.67 |
| மொனராகலை | 7517 | 4558 | 22.79 |
| குருநாகல் | 424 | 234 | 1.17 |
| கண்டி | 641 | 284 | 1.42 |
| மாத்தளை | 36 | 20 | 0.10 |
| அம்பாரை | 301 | 246 | 1.23 |
| பதுளை | 355 | 190 | 0.95 |
| **மொத்தம்** | **36927** | **18220** | **90.10** |

**புள்ளிவிபரக் குறிப்பு xxviii**



**மொனராகலையில் பசளை மானியக் காசோலைகளை வழங்குதல்**

## 3.15. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குக் காணிகளை துண்டுகளாக வேறுபடுத்துவதைக் கட்டுப்படுத்தும் சபையின் பணிகள்

1958 இலக்கம் 02 கொண்ட தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள், (துண்டுகளாக்குவதைக் கட்டுப்படுத்தல்) சட்டத்தின் கீழ் காணிகளைத் துண்டுகளாக பிரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கான சபை தாபிக்கப்பட்டது. 20 ஹெக்டேயரை விடக் குறைந்த இறப்பர் செய்கையாளர்கள் அல்லது அதன் ஒரு பகுதி துண்டினை வேறுபடுத்துவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு அவசியப்படும் சந்தர்ப்பத்தில் அச்சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதன்போது அந் நிறுவனத்தினால் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்கள் தெளிவாக மேற்பார்வை செய்து மேற்கூறப்பட்ட சபைக்கு பரிந்துரைகளுக்காக அனுப்பப்படும்.

இச் சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக கௌரவ அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களுக்கமைய கடமைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 3.16. சர்வதேச செயற்பாட்டுப் பணிகள்

இலங்கை சர்வதேச இறப்பர் கற்கைக் குழுவின் (IRSG) மற்றும் இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கத்தின் (ANRPC) அங்கத்தவராகும். இதற்காக 2016 ஆம் ஆண்டில் அங்கத்துவ நிதியாக இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் சங்கத்திற்கு ரூபா 1,065,298.10 உம், சர்வதேச இறப்பர் கற்கைக் குழுவிற்கு ரூபா. 6,832,896.01 உம் செலுத்தப்பட்டுள்ளது.

இந் நிறுவனங்களில் அங்கத்துவத்தை வகிக்கும் அந் நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு நேரடியாக மற்றும் வினைத்திறனுடன் பங்களிப்பு வழங்குவதன் மூலம் பரஸ்பர ரீதியில் இறப்பர் கைத்தொழில் மேம்பாட்டுக்கு பயன்மிக்க நிலைமைகள் உருவாக்கப்பட்டன. மேலும் அந் நிறுவனங்களுக்கு உள்நாட்டு இறப்பர் விலை, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தகவல்கள், விளை நிலங்களின் அளவு, துறையில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணிக்கை உட்பட தேவையான சகல தகவல்களுக்கும் உரிய நேரத்திற்கு ஆண்டு பூராகவும் அறிக்கைப்படுத்தப்பட்டன. அத்துடன் அந்நிறுவனங்கள் மூலம் ஏனைய நாடுகளின் தகவல்களையும் பெற்று உரிய தரப்பினருக்கிடையே விநியோகிக்கப்பட்டன.

கடந்த ஆண்டில் இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகள் சங்கத்தின் (ANRPC) வருடாந்த மாநாடு இந்தியாவில் நடாத்தப்பட்டது. இதற்காக இலங்கை, இந்தியா, காம்போஜ், தாய்லாந்து, வியட்நாம், இந்தியா, மலேசியா, சீனா, பிலிப்பைன்ஸ், பப்புவாகினியா, மற்றும் சிங்கப்பூர் ஆகிய அங்கத்துவ நாடுகள் பங்கேற்றன.

இம்மாநாட்டில் அடுத்த ஆண்டுக்கான தலைமைத்துவம் காம்போஜியாவுக்கு வழங்கப்பட்டது.

## 3.17. சட்ட ரீதியிலான செயற்பாடுகள்

இறப்பர் மீள் செய்கைக்காக மானிய உதவிச் சட்டத்தின் கீழ் இறப்பர் செய்கைக்கு அனுமதிப் பத்திரத்துடன் உதவிகளைப் பெற்றுக் கொண்ட சகல விண்ணப்பதாரர்களும் சகல உதவி நிதியினைப் பெற்று பூர்த்தி செய்யும்வரை செய்கையினை சிறந்த முறையில் பேணுவதற்கு மற்றும் தேவையான பணிகளை மேற்கொள்வதற்கு மானிய உதவிக் கட்டளைக்கமைய கட்டுப்பட்டுள்ளது. அனுமதிப்பத்திரம் கொண்டோர் அவர்களின் செய்கைகளைக் கருத்திற் கொள்ளாதிருப்பின் மற்றும் இறுதி உதவித் தவணையினை பெற்றுக் கொள்ளும்வரை செய்கையினை சிறந்த முறையில் பேணாதிருப்பின் பெற்றுள்ள உதவி நிதியினை திணைக்களத்திற்கு மீண்டும் செலுத்த கட்டளை பிறப்பிக்கப்படும்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உரிய சட்டங்களுக்கமைய வர்த்தமாணி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய உதவி பெறும் காணி இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி வேறு ஒருவருக்குக் கையளிக்க முடியாது.

இதற்கமைய அனுமதிப் பத்திரத்தில் செல்லுபடியாகும் கால எல்லையை நீடித்து அனுமதிப்பத்திரம் வைத்திருப்போரின் செய்கையினை பூரணப்படுத்துவதற்குத் தேவையான கால அவகாசத்தை வழங்கி இறப்பர் மீள்செய்கை மானிய உதவிச் சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படக்கூடியவாறு வெற்றிகரமாக இறப்பர் செய்கையினை முன்னெடுப்பதற்கு தவறும் மானிய உதவி பெற்றுக்கொண்ட காணி உரிமையாளர்களுக்கு பெற்ற உதவியினை மீளச் செலுத்துவதற்கு அறிவிக்கப்படும். அவ்வாறு செலுத்தாத காணி உரிமையாளர்களுக்கு இறுதி நடவடிக்கையாக வழங்குத் தாக்கல் செய்யப்படும்.

தோல்விகரமான செய்கை அறவீடுகள் - 2016 ஆம் ஆண்டு

| மாவட்டம் | அறவிட்ட செய்கை ளர்களின் எண்ணிக் கை | அறவிடவுள்ள முழுமையான நிதி (ரூபா) | இறுதியாக அறிவித்தல் அனுப்பப் பட்டுள்ள நிதி | வழக்குத் தாக்கல் செய்து அறவிட்ட நிதி | அறவிடுவதற் கு எஞ்சியுள்ள செய்கையா ளர்களின் எண்ணிக்கை | அறவிடவுள் ள நிதி |
|---|---|---|---|---|---|---|
| காலி | 14 | 4,414,126.82 | 113,106.90 | - | 303 | 4,301,019.92 |
| மாத்தறை | 48 | 3,226,351.43 | 262,905.58 | - | 170 | 2,963,445.85 |
| ஹம்பாந் தோட்டை | 16 | 717,793.56 | 62,388.88 | - | 52 | 655,404.68 |
| கொழும்பு | 1 | 185,592.17 | 19,627.69 | - | 09 | 165,964.48 |
| இரத்தினபுரி | 10 | 763,052.17 | 123,364.02 | - | 33 | 639,688.15 |
| களுத்துறை | 20 | 754,785'11 | 515,946.71 | - | - | 238,838.40 |
| மொனராகலை | 01 | 25,200.00 | 25,200.00 | - | - | - |
| பதுளை | 01 | 13,200.00 | 13,200.00 | - | - | - |
| அம்பாரை | 02 | 49,920.00 | 49,920.00 | - | - | - |
| கேகாலை | 34 | 940,770.37 | 244,575.26 | 15,000.00 | 30 | 681,195.11 |
| கம்பஹா | 02 | 229,987.74 | 229,987.74 | - | - | - |
| குருநாகல் | 01 | 53,810.50 | 53,810.50 | - | - | - |
| மொத்தம் | **150** | **10,619,804.76** | **1,714,033.28** | **15,000.00** | **597** | **9,645,556.59** |

**புள்ளிவிபரக் குறிப்பு xxix**

மேலும் காலநிலை மற்றும் ஏனைய நியாயமான காரணங்களுக்கமைய செய்கை தோல்வியடைந்த விவசாயிகள் தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தி மீண்டும் செய்கை ஆலோசனை சபை அங்கீகாரத்தைப் பெற்று மானிய உதவி நிதியினை இரத்துச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## 3.18. விசேட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

### 3.18.1. அம்பாரை மாவட்டத்தில் இறப்பர் செய்கையினை விரிவுபடுத்தல்

2012 வரவு செலவு யோசனைக்கமைய அம்பாரை மாவட்டத்தில் இறப்பர் செய்கையினை விரிவுபடுத்துவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய சுமார் 10,000 ஹெக்டேயரில் இறப்பர் செய்கைகளை மேற்கொள்ள இலக்காகக் கொள்ளப்பட்டது. இதன் அடிப்படை நடவடிக்கையாக 2012 ஆம் ஆண்டில் 550 ஹெக்டேயர் இறப்பர் செய்கை இலக்கு காணப்பட்டதுடன் ஆண்டு இறுதியில் 137.5 ஹெக்டேயர் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்டது. மகாஓயா, பதியத்தலாவ, உஹன ஆகிய என்ற பிரதேச செயலகப் பிரிவுகளை பகிரக்கூடியவாறு இறப்பர் செய்கை வேலைத்திட்டங்கள் விரிவு படுத்தப்பட்டுள்ளன.

இதன் இரண்டாவது கட்டமாக 2013 ஆம் ஆண்டில் 402.93 ஹெக்டேயர் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் மூன்றாவது கட்டமாக 2014 ஆம் ஆண்டு 256.17 ஹெக்டேயரில் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டில் 400.29 ஹெக்டேயர்களில் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் 2016 ஆம் ஆண்டில் செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட காணியின் அளவு 212.57 ஹெக்டேயர் ஆகும். இதற்கமைய இது வரையில் 1409.46 ஹெக்யேடர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3.19. இணைந்த நிதியம்

| செலவின விடயங்கள் | அடிப்படை ஒதுக்கீட்டு கிடைப்பனவு ரூபா. | தேறிய செலவினம் ரூபா. |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் | 243,698,000 | 229,669,274.31 |
| பிரயாணச் செலவினம் | 9,240,000 | 9,191,057.63 |
| வழங்கல் | 6,060,000 | 5,766,889.23 |
| பராமரிப்புச் செலவினம் | 5,900,000 | 5,039,183.83 |
| உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட சேவைகள் | 31,600,000 | 30,576,806.93 |
| எரிபொருள் | 3,500,000 | 3,499,747.49 |
| சமயம் சார்ந்த பங்களிப்பு நிதி | 13,800,000 | 13,773,244.18 |
| சொத்துக் கடன் வட்டி | 1,500,000 | 1,349,209.05 |
| **மொத்தம்** | **315,298,000** | **298,865,412.65** |
| **மூலதனச் செலவினம்** | | |
| மூலதனச் சொத்து மீண்டெழும் மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளல் | 16,500,000 | 15,093,868.08 |
| மூலதனச் சொத்துக்களைப் பொறுப்பேற்றல் | 12,000,000 | 11,620,548.85 |
| அபிவிருத்தி உதவிகள் | 1,000,000,000 | 710,831,106.74 |
| இயலுமை விருத்தி | 1,000,000 | 995,516.00 |
| ஏனைய முதலீடுகள் | 40,000,000 | 35,131,787.03 |
| **மொத்தம்** | **1,069,5000,000** | **773,672,826.70** |
| **முழுமொத்தம்** | **1,384,798,000** | **1,072,538,239.35** |

**புள்ளிவிபரக் குறிப்பு xxx**

## 3.20. செஷ் கிடைப்பனவு மற்றும் அதனை அறவிடும் முறைகள்

இறப்பர் சார்ந்த முடிவுப்பொருள் உற்பத்தி செய்யப்படும் கைத்தொழிலாளர்களின் அப்பொருள் உற்பத்திக்காக உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்யப்படும் இறப்பருக்காக செஷ் வரி அறவிடப்படுகின்றது.

2007 இலக்கம் 01 கொண்ட செஷ் வரிக்கட்டளைக்கமைய அவ் ஒரு கிலோ இறப்பருக்காக 4/- ரூபா வீதம் செஷ் வரி அறவிடப்படுகின்றது. அவ் வரி "பணிப்பாளர் நாயகம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்" என்ற பெயரில் எழுத்தப்பட்ட காசோலை மூலம் செலுத்தப்படுகின்றது. அத்துடன் உரிய மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இறப்பர் அளவினைக் குறிப்பிடும் மாதாந்தக் கொள்வனவு அறிக்கை (Rcess 4A) உரிய கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

(1) பதிவுகள்

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 153 |
| செலுத்த வேண்டிய மொத்தக் கம்பனிகளின் எண்ணிக்கை | 56 |
| செஷ் வரி செலுத்தும் கம்பனிகளின் எண்ணிக்கை | 49 |
| பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை | 120 |

**உள்நாட்டுப் பயன்பாடுகளுக்கமைய அறவிடப்பட்ட செஷ் வரி**

| உரிய மாதம் | வருமானம் (உள்நாட்டு நுகர்விற்கமைய) ரூபா மில் |
|---|---|
| ஜனவரி | 7.55 |
| பெப்ரவரி | 12.07 |
| மார்ச் | 11.46 |
| ஏப்ரல் | 21.85 |
| மே | 9.10 |
| ஜூன் | 10.01 |
| ஜூலை | 8.42 |
| ஆகஸ்ட் | 20.16 |
| செப்ரெம்பர் | 13.49 |
| ஒக்டோபர் | 20.35 |
| நவம்பர் | 17.03 |
| டிசம்பர் | 19.86 |
| **மொத்தம்** | **171.35** |

**செஷ் வரி புள்ளிவிபரக் குறிப்பு xxxi**

இறப்பர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மீது அறவிடப்படும் செஷ் வரி தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மீது அறவிடப்பட்ட செஷ் வரி 2016**

| உரிய மாதம் | இறக்குமதி மீது ரூபா. மில் | ஏற்றுமதியின் மீது ரூபா. மில் |
|---|---|---|
| ஜனவரி | 198.2 | 6.9 |
| பெப்ரவரி | 189.2 | 8.2 |
| மார்ச் | 170.4 | 10.9 |
| ஏப்ரல் | 230.6 | 11.9 |
| மே | 248.7 | 10.0 |
| ஜூன் | 199.0 | 5.5 |
| ஜூலை | 218.7 | 3.1 |
| ஆகஸ்ட் | 252.2 | 5.0 |
| செப்ரெம்பர் | 238.5 | 6.9 |
| ஒக்டோபர் | 217.8 | 8.8 |
| நவம்பர் | 206.3 | 9.0 |
| டிசம்பர் | 255.2 | 7.8 |
| **மொத்தம்** | **2624.8** | **94** |

**செஷ் வரி புள்ளிவிபரக் குறிப்பு xxxii**

## 3.21. மீள் பயிர்ச் செய்கை ஆலோசனை சபை

1953 இலக்கம் 36 கொண்ட இறப்பர் மீள்செய்கை மானிய உதவிச் சட்டத்தின் 10 வது வாசகம் மற்றும் 1936 இலக்கம் 11 கொண்ட இறப்பர் நிருவாகச் சட்டத்தின் 40 மற்றும் 41 வது வாசகங்களுக்கமைய இச்சபை தாபிக்கப்பட்டுள்ளது.

இச்சபை இறப்பர் மீள்செய்கை மானிய உதவிச் சட்டம் தொடர்பில் எழும் விடயங்கள் தொடர்பாக கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருக்கு ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் இறப்பர் மீள் செய்கைகளை மேற்கொள்வதற்கான மானிய உதவித் திட்டத்தை நிர்வகிப்பதற்காக பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனைகள் வழங்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் தலைவர் உத்தியோக பூர்வமாக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாவார். எஞ்சிய அங்கத்தவர்கள் கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் நிர்வகிக்கப்படுவர்.

## 3.22. உள்ளக கணக்காய்வுப் பணிகள்

- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - M.B.S இறப்பர் ஸ்ரோர்ஸ்
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை- கொள்ளுப்பிட்டி இறப்பர் ஸ்ரோர்ஸ்
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - அரோமா ரேடர்ஸ்
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - T.K ரேடர்ஸ
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - மரங்கோணி கம்பனி
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - R.A.M.L ரணசிங்க
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - சதுரங்க இறப்பர் ஸ்ரோர்ஸ்
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - கிரியல்ல இறப்பர் ஸ்ரோர்ஸ்
- இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகத்தைத் திறக்காமை - இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர், ஆகல்ஓயா
- செஷ் வரி செலுத்த வேண்டிய நிறுவனமாக இனங்காணல்- ஸ்ரார்கோ லங்கா நிறுவனம்
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - கிரியல்ல இறப்பர் ஸ்ரோர்ஸ் 2015 ஜூலை - செப்ரெம்பர்
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - லோடர்ஸ்டார் தனியார் கம்பனி
- திணைக்களத்திற்கு நிதிக் குறைபாடுகள் இடம்பெறக்கூடியவாறான பெறுகைத் தீர்மானங்கள் - மொனராகலை பிரதேச அலுவலகம்
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - தள்துவ இறப்பர் ஸ்ரோர்ஸ்
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - கொழும்பு இறப்பர் கடை 2014 டிசம்பர் - 2015 பெப்ரவரி
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - கொழும்பு இறப்பர் கடை 2015 ஜூலை - செப்ரெம்பர்
- நிர்னயிக்கப்பட்ட விலைக் கொடுப்பனவு பரிசோதனை - கொழும்பு இறப்பர் கடை (LD/KG/789)

## 3.23. பிரச்சாரப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

**பயிற்சி வேலைத்திட்டங்கள்**

01. தொழில்சார் மட்டத்தில் பால் வெட்டும் கலைசார்ந்த வேலைத்திட்டங்கள் மூலம் அது தொடர்பாக 230 பேர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

02. அறுவடை உதவியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 117 வேலைத்திட்டங்கள் பாரம்பரிய இறப்பர் செய்கையை மேற்கொள்ளும் பிரதேசங்களில் நடாத்தப்பட்டதுடன் 22 வேலைத்திட்டங்கள் பாரம்பரியமல்லாத பிரதேசங்களில் நடாத்தப்பட்டன.

03. இறப்பர் கன்றுகளை ஒட்டும் பயிற்சி வேலைத்திட்டத்தின் கீழ் 07 வேலைத்திட்டங்கள் திணைக்களத்தின் நாற்றுமேடைக்கு அண்மித்த இடங்களில் நடாத்தப்பட்டன.

04. இறப்பர் செய்கை மற்றும் கைத்தொழில் தொடர்பான பல கண்காட்சிகள் பல்வேறுபட்ட இடங்களில் நடாத்தப்பட்டன. அவ் இடங்கள் மற்றும் நடாத்தப்பட்ட தினங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

    **i.** 2016 மே மாதம் 15 மற்றும் 16 ஆகிய தினங்களில் ஸ்ரீ ஜனவர்தனபுர பல்கலைக்கழகம்.

    **ii.** உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு 2016 ஜுன் மாதம் 05 மற்றும் 06 ஆகிய தினங்களில் மொனராகலை கொடவெகெர மங்கட கல்லூரியில் கண்காட்சி நடாத்தப்பட்டது.

    **iii.** அதிமேன்மை தங்கிய ஜனாதிபதியின் யோசனைக்கமைய தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கண்காட்சி 2016 ஆகஸ்ட் 29,30 ஆகிய தினங்களில் அம்பாறை விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்டது.

    **iv.** 2016 ஆகஸ்ட் மாதம் 08,09,1011 ஆகிய தினங்களில் குண்டசாலை விவசாயக் கல்லூரியில் கண்காட்சி நடாத்தப்பட்டது.

    **v.** உவா வெல்லெஸ்ஸ பல்கலைக்கழகத்தின் கண்காட்சி 2016 செப்ரெம்பர் மாதம் 08 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதிவரை நடைபெற்றது.

    **vi.** 2016 செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி மொனரகாலை நூலகக் கேட்போர் கூடத்தில் கண்காட்சி நடைபெற்றது.

    **vii.** 2016 ஒக்டோபர் மாதம் 9,10,11 ஆம் திகதி எம்பிலிப்பிட்டிய பொதுபுத்தி மண்டபத்தில் கண்காட்சி நடாத்தப்பட்டது.

05. இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நிறுவனத்துடன் இணைத்து பல வேலைத்திட்டங்கள் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் நடாத்தப்பட்டன.

06. இறப்பர் சார்ந்த முடிவுப்பொருள் உற்பத்திகளை மேற்கொள்ளும் பல பயிற்சி வேலைத்திட்டங்கள் 07 இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் கோட்டப் பிரிவுகளில் நடாத்தப்பட்டன.

07. மழைக் கவசங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக அறிவுறுத்தும் வகையில் பல வேலைத்திட்டங்கள் 16 இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தார் கோட்டப் பிரிவுகளில் நடாத்தப்பட்டன.

08. இறப்பர் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் சிந்தனை விருத்திக்காக பல வேலைத்திட்டங்கள் 14 இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவுகளில் நடாத்தப்பட்டன.

09. புதிய இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக வதிவிடப் பயிற்சி வேலைத்திட்டங்கள் இரு சந்தர்ப்பங்களில் நடாத்தப்பட்டன.

10. பழைய இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பாடநெறி இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடாத்தப்பட்டன.

11. பல பத்திரிகை விளம்பர அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டன.

    i. 2016.09.25 திவென பத்திரிகையில் வெவிலிசவிய கிராமம் தோறும் சமூக நற்பணி நடமாடும் சேவை தொடர்பாக நான்கு நிறங்களைக் கொண்ட அரைப்பக்க விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.
    ii. 2016.09.27 ஆம் திகதி அரச பசளை மானியம் தொடர்பாக லங்காதீப பத்திரிகையில் 04 நிறங்களைக் கொண்ட அரைப்பக்க விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.

12. 2016 ஆம் ஆண்டில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் ஒத்துழைப்புடன் இறப்பர் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் பரவலாக்கலுக்காக தகவல் அறிக்கை சார்ந்த திரைப்படங்கள் தயாரிப்பதற்காக திரைவசனங்களை எழுதுவதற்கும் அது தொடர்பான ஒழுங்குச் செயற்பாடுகள், இடப் பரிசோதனைகள் போன்ற அடிப்படைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## 3.24. கணணிப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகள்

- இறப்பர் தகவல் முகாமைத்துவ முறைமை செயற்திட்டத்தின் மென்பொருள் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் Price Water House Coopers தனியார் நிறுவனத்துடன் இணைப்புப் பணிகளை மேற்கொண்டு செயற்திட்டப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்தல்.

- பிரதான அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு ஆண்டிற்குள் கணணி மற்றும் பாகங்களைக் கொள்வனவு செய்யும் பணிகளை மேற்கொள்ளல்.

- திணைக்களத்தின் இறப்பர் பசளை மானிய உதவிக் கொடுப்பனவிற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய முறைமைகளுக்கமைய மென்பொருள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளல், பிரதேச அலுவலகங்களின் மென்பொருள் தாபித்தல் மற்றும் பயிற்சிப் பணிகள், உயரிய முகாமைத்துவத்திற்குத் தேவையான அறிக்கைகளை வழங்குதல் உட்பட முழுமையான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

- திணைக்களத்தின் இறப்பர் செய்கை மானிய உதவிக் கொடுப்பனவிற்காக அமுலில் உள்ள கணணி வேலைத்திட்டத்தின் முழுமையான செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் முன்னெடுத்தல்.

## 4. பிரதேச அலுவலகங்களின் முன்னேற்றங்கள்

நாட்டில் இறப்பர் செய்கை மேற்கொள்ளும் 14 மாவட்டங்களில் சேவை வழங்கலுக்காக 05 பிரதேச அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டில் அவ் அலுவலகங்களினால் எட்டப்பட்ட முன்னேற்றங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

### 4.1. இறப்பர் புதிய செய்கை முன்னேற்றம்




அம்பாரை மாவட்டத்தில் செய்கை இலக்கு 500 ஹெக்டேயர் ஆகும். வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மகாவலி காணிகளை நிர்னயிக்க முடியாமையினால் வழங்கப்பட்ட இலக்கினை எட்ட முடியவில்லை.

### 4.2. இறப்பர் மீள் செய்கை முன்னேற்றம்



### 4.3. இடைக்காலப் பயிர்ச் செய்கை முன்னேற்றம்




### 4.4. மழைப் பாதுகாப்பினை இடல்



## 4.5. பால் வெட்டும் கலைசார்ந்த பயிற்சி வேலைத்திட்டம்




## 4.6. பால் வெட்டும் கலைசார்ந்த தொழில்சார் பயிற்சி வேலைத்திட்டம்



## 4.7. ஒட்டுனர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டம்








பிரதேச அலுவலங்கள் மூலம் பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல்

# 5. ஏனைய நிறுவனங்களின் சேவைகளை மேற்கொள்ளல்.

கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களுக் கமைய ஆண்டுக்குள் கீழ்க் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் பணிப்பாளர் சபை அங்கத்துவத்தை வகித்து பொறுப்பளிக்கப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்பட்டன.

2.1. இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம்
2.2. துருசவிய நிதியம்
2.3. இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம்
2.4. தோட்டக் காணிகளைத் துண்டுகளாக்கி நிறுவகிக்கும் சபை

பணிப்பாளர் சபைக்கூட்டங்களில் கலந்து கொள்ளல், கருத்துக்கள் மற்றும் யோசனைகளைச் சமர்ப்பித்தல், தீர்மானங்களுக்காக உதவுதல், தேவையான இணக்கம் மற்றும் அங்கீகாரங்களை வெளியிடல், உரிய பணிகளை ஆய்விற்குட்படுத்தல், அந் நிறுவனங்களில் அமுலில்உள்ள வேலைத்திட்டங்களுக்காக பங்களிப்புக்களை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு மேலதிகமாக திணைக்களத்தின் சேவைகள் அவசியப்படும் சந்தர்ப்பங்களில் சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களினால் அவர்கள் கோரும் சேவைகள் தகவல் மற்றும் உதவிகள் குறைவின்றி வழங்கப்பட்டன. பாடசாலைக் கண்காட்சிகளுக்கு உதவும் விரிவுரைகள் மற்றும் தகவல்கள் அடிப்படையில் உதவுதல், நிறுவனங்களுக்கு மற்றும் நபர்களுக்குத் தேவையான புள்ளிவிபர ரீதியிலான தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள், கலைசார்ந்த ஆலோசனைகள் போன்றவற்றை வழங்குவதும் இவற்றில் அடங்குகின்றன.

இச் சேவைகள் மற்றும் தகவல்களை வழங்குவது பிரதான அலுவலகத்தின் பிரதேச அலுவலகங்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களினதும் நாற்றுமேடை முகாமையாளர்களினதும் உதவிகளுடன் இடம்பெற்றன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | பிஎல்ஏ/சீ/ஆர்சீஎவ்/<br>06/16/01 | මබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2017 செப்தம்பர் 30 |

பணிப்பாளர் நாயகம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்.

**இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1957 இன் 45 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1956 இன் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு அதிகாரச்சட்டத்தின் (436 ஆவது அதிகாரம்) 39 (அ) (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் மற்றும் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 1,864,559 தொகை இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்கு பதிலாக அது நடைமுறைச் சொத்தொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 635,271 கூட்டுத்தொகையான 13 நடைமுறைச் சொத்துக்களின் மீதிகள் 19 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அந்த மீதியில் ரூபா 287,378 தொகையான தீர்க்கப்படாத முற்பண மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 239,784 கூட்டுத்தொகையான 05 நடைமுறைப் பொறுப்பு விடயங்களின் மீதிகள் 19 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில்

முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 222,031 தொகையான செலுத்த வேண்டிய முற்பணத்தைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய எந்தச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 985,925 | - மெய்மையாய்வு அறிக்கை,<br>- நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்கள் | 635,271 | - பட்டோலைகள்<br>- காலப்பகுப்பாய்வு,<br>- மீதி உறுதிப்படுத்தல் |
| (இ) | நடைமுறைப் பொறுப்புக்கள் | 239,784 | - பட்டோலைகள்<br>- காலப்பகுப்பாய்வு,<br>- மீதி உறுதிப்படுத்தல் |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

நிதியத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் காணப்படாமையினால் மீளாய்வாண்டிற்காக நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான தற்போதைய நிலைமை

2009 யூலை 23 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் குழு கூட்டத்தின் போது நிதியத்தைக் கலைப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக

அமைச்சரவை விஞ்ஞாபனம் 2016 பெப்ரவரி 26 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 மார்ச் 09 கிடைத்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் கலைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. நிதி அமைச்சின் அவதானிப்புக்களுக்கு இணங்க சட்டவரைவு தயாரிப்பாளரின் ஒத்துழைப்புடன் நிதியத்தின் நடவடிக்கைகளை கலைப்பதற்குத் தேவையான நியதிச்சட்ட வரைவு, 2017 யூன் 30 ஆந் திகதியிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

நிதியம் இறுதியாக செயற்படு நிலைமையில் காணப்பட்ட 1997 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஐந்தொகையிலிருந்து மீளாய்வாண்டு ஐந்தொகை வரை முன்கொண்டு வரப்பட்டிருந்த கலைப்பதற்கு உட்படக்கூடிய நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களுக்குரிய நிறுவனங்கள் தற்போது செயற்படாத நிலைமையில் இருப்பது இனங்காணப்பட்டமையால் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளவாறு மற்றும் நியாயமாக நிருபணமாகும் கணக்கு உருப்படிகள் அல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 107 நாட்கள் தாமதித்து 2017 யூன் 15 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. நிலையான சொத்துக்கள் மற்றும் பெறவேண்டிய / செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைத்தல் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறன.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. பிஎல்ஏ/சீ/ஆர்ஆர்எஸ்எவ்/06/16/01

මබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2017 செப்தம்பர் 30

பணிப்பாளர் நாயகம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்.

**இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1953 இன் 36 ஆம் இலக்க இறப்பர் மீள் நடுகை உதவுதொகை நிதிய அதிகாரச்சட்டத்தின் (437 ஆவது அதிகாரம்) 6(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

---

2.1 மறுப்பு அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

முன்னைய ஆண்டின் போது திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 70,659,526 தொகை நிதியத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்கு பதிலாக அது நடைமுறைச் சொத்தொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.2.2 கணக்காய்விற்குத் சான்றுகள் இன்மை

---

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்றை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி (ரூபா) | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றப்பட்ட சொத்துக்கள் | 63,438,232 | - சொத்துக்கள் அட்டவணை மற்றும் சொத்துக்கள் கையேற்கப்பட்டமைக்கான பதிவேடு |
| (ஆ) நடைமுறைச் சொத்துக்கள் | | |
| 12 முற்பணக் கணக்கு மீதிகள் | 15,220,514 | - முற்பண பதிவேடு, அறவிடப்பட வேண்டிய தரப்பினரின் பெயர்ப் பட்டியல் |
| பொதுத் திறைசேரியிலிருந்தும் சுங்கத் திணைக்களத்திடமிருந்தும் கிடைக்கவேண்டிய மீதிகள் | 17,353,015 | - மீதி உறுதிப்படுத்தல் பதிவேடுகள் |
| செயற்திட்ட இலக்கம் 02 ஆம் கணக்கு | 65,477,579 | |
| ஏனைய 07 நடைமுறைச் சொத்துக் கணக்குகளின் கூட்டுத்தொகை | 4,101,462 | |
| (இ) நடைமுறைப் பொறுப்புக்கள் | | |
| நானாவித வைப்புக்கள் | 9,988,530 | - உறுதிப்படுத்தல் பதிவேடுகள் |
| பெறவேண்டிய கடன் | 473,839 | - பெற வேண்டிய தரப்பினர் தொடர்பான தகவல்கள் |
| இறப்பர் கட்டுப்பாட்டு நிதியம் | 281,210 | - உறுதிப்படுத்தல் பதிவேடுகள் |
| பணிக்கொடை கடப்பாடு | 90,706 | - பெற வேண்டிய தரப்பினர் |

| | | | |
|---|---|---|---|
| | | | தொடர்பான தகவல்கள் |
| நாற்றுக்கள் முற்பணம் பசளை | 119,550 | - | உறுதிப்படுத்தல் பதிவேடுகள் |
| முதிர்ச்சியடைந்த பயிர்களுக்கான பசளை | 4,779,564 | - | உறுதிப்படுத்தல் பதிவேடுகள் |
| நிதியத்திற்கு உரித்தல்லாத கடன் | 3,096,701 | - | செலுத்த வேண்டிய தரப்பினர் தொடர்பான தகவல்கள் |
| | | - | கடப்பாடு ஏற்படுத்தப்பட்டமைக்கான காரணம் |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

நிதியத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் காணப்படாமையினால் நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான தற்போதைய நிலைமை

2009 யூலை 23 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் குழு கூட்டத்தின் போது நிதியத்தைக் கலைப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் 2016 பெப்ரவரி 26 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 மார்ச் 09 கிடைத்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2016 யூன் 13 ஆந் திகதி கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் கலைப்பு நடவடிக்கைகள் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. நிதி அமைச்சின் அவதானிப்புக்களுக்கு இணங்க சட்டவரைவு தயாரிப்பாளரின் ஒத்துழைப்புடன் நிதியத்தின் நடவடிக்கைகளை கலைப்பதற்குத் தேவையான நியதிச்சட்ட வரைவு, 2017 யூன் 30 ஆந் திகதியிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

இறுதியாக செயற்படு நிலைமையில் காணப்பட்ட 1997 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஐந்தொகையிலிருந்து மீளாய்வாண்டு ஐந்தொகை வரை முன்கொண்டு வரப்பட்டிருந்த கலைப்பதற்கு உட்படும் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களுக்குரிய நிறுவனங்கள் தற்போது செயற்படாத நிலைமையில் இருப்பது இனங்காணப்பட்டுள்ளதால் ஐந்தொகையில்

காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளவாறு மற்றும் நியாயமாக நிரூபணமாகும் கணக்கு உருப்படிகள் அல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 107 நாட்கள் தாமதித்து 2017 யூன் 15 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. நிலையான சொத்துக்கள் மற்றும் பெறவேண்டிய செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைத்தல் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றன.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி